# காலைக்கதிர்
Kālaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 25, வியாழக்கிழமை 10.11.2016 | கதிர் 05




காலைக்கதிரின் பணி
ஓங்கி ஒலிக்கட்டும்
ஏகாம்பரம்
புடைவை மாளிகை
Whole Sale &
Retail Dealers in Textiles
இல.74 (7) பெரியகடை
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2151, 021 222 5938
(அ-002)




வெற்றியின் பின்னர் ட்ரம்ப் மக்கள் முன் உரையாற்றிய போது...

# அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்!

## ஹிலாரி அதிர்ச்சித் தோல்வி

வொஷிங்டன், நவ.10

பலரும்எதிர்பாராதவகையில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார்.

இந்தத் தேர்தலில் பிரகாசமான வெற்றி வாய்ப்பைக் கொண்டவர் எனக் கருதப்பட்ட ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டன் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

ட்ரம்பின் இந்த வெற்றியின் மூலம் அமெரிக்காவில் இதுவரை எட்டு ஆண்டுகளாக அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஜனநாயகக் கட்சியின்

பக்கம் 20 »

# இலங்கை ஜனாதிபதியும், பிரதமரும புதிய அமெ. ஜனாதிபதிக்கு வாழ்த்து

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய டொனால்ட் ட்ரம்புக்கு இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று வாழ்த்துச் செய்திகளை அனுப்பி வைத்தனர்.

பக்கம் 20 »

# ட்ரம்பின் வெற்றியைத் தொடர்ந்து புதிய உலக ஒழுங்கு கட்டவிழுமாம்!

## வாழ்த்துச் செய்தியில் மஹிந்த நம்பிக்கை



கொழும்பு, நவ.10

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றியீட்டியிருக்கின்றமையை அடுத்து, புதிய உலக ஒழுங்கு ஒன்று கட்டவிழ்வதைத் தாம் எதிர்பார்த்திருக்கின்றார் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

சுதந்திர அரசுகளின் உள்விடயங்களில் பிற தரப்புக்கள் தலையிடாமை, எல்லா நாடுகளுக்கும் சமத்துவமான இறைமைக்கான உரிமை

பக்கம் 20 »

## ட்ரம்பின் வெற்றியால்

# இலங்கையின் மீதான அமெரிக்க அழுத்தம் அடியோடு அகன்றது!

கொழும்பு, நவம்பர் 10

**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்பின் வெற்றி, இலங்கைக்குப் பெரும் ஆசீர்வாதமாக அமைந்திருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.**

**யுத்தக் குற்றங்கள், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க விடயங்கள் தொடர்பாக அடுத்த ஆண்டில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் கடும் அழுத்தத்தை எதிர்கொள்ளும் ஆபத்திலிருந்து இலங்கைக்கு டிரம்பின் வெற்றி அபயமளிக்கும் தஞ்சமாக வந்து அமைந்திருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.**

இலங்கையில் நடந்து முடிந்த யுத்தம் தொடர்பில் கொழும்பு உரிய யுத்தக் குற்ற விசாரணைகளை முன்னெடுக்கத் தவறுமேயானால் அங்கு சர்வதேச யுத்தக் குற்ற விசாரணை ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற சாரப்பட ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் 2014இல் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தற்போது பதவியிலிருந்து வெளியேற இருக்கும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஐ.நா. தூதுவரான சமந்தா பவரே மேற்படி இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் பின்னணியில் செயற்பட்ட பிரதான சூத்திரதாரி என்று கூறப்படுகிறது.

பக்கம் 20 »

அளப்பு அருணாசலம்



உது... சீட்டுக் கட்டில வர்ற ட்ரம்ப் (துரும்பு) போல... அதுதான் சடார் என்று ஹிலாரி அன்ரியையும் வெட்டிப் போட்டுது போலை...!

# யுத்தக் குற்ற விடயங்களில் பிடி தளரும்; ஒபாமாவின் போக்கை ட்ரம்ப் பின்பற்றார்

லண்டன், நவ.10

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்பின் வெற்றியினால் இலங்கை மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள், போர்க்குற்ற விவகாரங்கள் ஆகியவற்றில் அமெரிக்காவின் பிடி தளரவோ அற்றுப் போகவோ வாய்ப்புகள் உள்ளன.

-இவ்வாறு கூறியிருக்கின்றார் பிரபல அரசியல் ஆய்வாளர் பேராசிரியர் எஸ்.கீதபொன்கலன்.

அமெரிக்காவிலிருந்து நேற்றிரவு லண்டன் பி.பி.ஸி.தமிழோ

பக்கம் 20 »

# தனியாரின் காணிகளை விலைக்கு வாங்கி மீள்குடியேற்றம் செய்வதற்கு அரசு முடிவு!

## நிலக் கொடுப்பனவுக்காக ரூ.8 கோடி 80 லட்சம் அனுமதி

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு மாற்றுக் காணிகளைப்பெற்றுக்கொடுப்பதற்காக தனியார் காணிகளை விலை கொடுத்து வாங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாம்.

இவ்விடயம் தொடர்பாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் முன்வைத்த யோசனையை ஏற்றுக்கொண்டுள்ள அமைச்சரவை, யாழ். மாவட்ட அரச அதிபர் ஊடாக மேற்படி இடம்பெயர்ந்த மக்களுக்காகத் தனியார் காணிகளை அடையாளம் கண்டு கொள்வனவு செய்வதற்கு 8 கோடி 80 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்யும் அனுமதியை வழங்கியிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த 971 குடும்பங்கள் இன்னமும் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 682 குடும்

பக்கம் 20 »

# தமிழருக்கு பின்னடைவான நிலைமை


அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்பின் வெற்றி இலங்கைத் தமிழர்களின் உரிமைப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் தமிழ்மக்களுக்குப் பாதகமான - பின்னடைவான - சூழலை உருவாக்கலாம் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தில் தமிழர் தரப்பு தோற்றுள்ள நிலையில் சர்வதேச அழுத்தம் என்ற ஒரே வலிமைதான் தமிழர்களுக்கு நீதி கிட்டுவதற்கான ஒரே மார்க்க

பக்கம் 20 »

சுகாதாரத் தொழிலாளரின் போராட்டம் தொடர்கிறது

# குப்பை, கழிவுகள் தேங்கியதால் யாழ். நகர் எங்கும் துர்நாற்றம்



யாழ்ப்பாணம்,நவ.10

யாழ்.மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் தொடர்ந்து பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவருகின்றமையால் யாழ். நகரப் பகுதியெங்கும் துர்நாற்றம் வீசுகின்றது.

தங்களுக்கு நிரந்தர நியமனம்வழங்குமாறு கோரிசுகாதாரத் தொழிலாளர்கள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்த போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்து இடம்பெற்றது.


இதனால் யாழ்.நகரில் குப்பைகளும் கழிவுகளும் பெருகிக் காணப்படுகின்றன. அன்றாடம் அகற்றப்படவேண்டிய இந்தக் கழிவுகள் மூன்று நாட்களாக அகற்றப்படாமையால் துர்நாற்றம் வீசுகின்றது.

குறிப்பாக, யாழ்.நகரில் சின்னக்கடை, கொட்டடி மீன் சந்தைகளிலுள்ள கழிவுகள் அகற்றப்படாமையால் கடல் உணவுகளை விற்பனைசெய்பவர்களும் அவற்றைக் கொள்வனவு செய்யச் செல்லும் மக்களும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

நேற்றைய தினம் இந்தச் சந்தைகளுக்குச் சென்ற சிலர் துர்நாற்றம் காரணமாக உள்ளே செல்லாமலே திரும்பிச் சென்றமையைக் காணமுடிந்தது.

இதேபோன்று யாழ்.நகரிலுள்ளவர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவும் குப்பைகள், கழிவுகள் தேங்கியுள்ளமையால் துர்நாற்றம் வீசுகின்றது. (ம-12)

# சுகாதாரத் தொழிலாளர்கள் தீக்குளிப்பதற்கு முயற்சி!



யாழ்ப்பாணம், நவ.10

யாழ். மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் தொடர்ந்து மூன்றாவது நாளாக நேற்றும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

தம்மை நிரந்தரமாக்கக் கோரி நடைபெறும் இந்தப் போராட்டத்தை உரிய தரப்பினர் எவரும் கண்டு கொள்ளவில்லை என்றும் அதையடுத்து சுகாதாரத் தொழிலாளர்கள் சிலர் நேற்று தீக்குளிக்க முற்பட்டனர் என்றும் அதற்காக அவர்கள் மண்ணெண்ணெய் கொல்கலன்களோடு தயாராக தமது பணிப் பகிஸ்கரிப்பு போராட்டத்துக்கு வந்திருந்தனர் என்றும் ஐக்கிய தொழிலாளர் சங்கத் தலைவர் அற்புதம் உதயகுமார் தெரிவித்தார்.

விரக்தியுற்றிருக்கும் தொழிலாளர்கள் சிலரே இவ்வாறான முயற்சியில் ஈடுபட்டனர் என்றும் தாங்கள் போராட்டத்தை அமைதியான முறையில் முன்னெடுக்கவே விரும்புகின்றோம் என்றும் உதயகுமார் தெரிவித்தார்.

## வடக்கில் பதற்றத்தை உருவாக்கி நன்மையடைய ராஜபக்ஷக்கள் முயற்சி

*அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித தெரிவிப்பு*



கொழும்பு,நவ.10

தேர்தல்களில் வடக்கு மக்கள் வாக்களிக்காவிட்டால்தான் ராஜபக்ஷக்களுக்கு வெற்றி கிடைக்கும். இதனால், வடக்கில் தேர்தல் வரும்போது பதற்றமான சூழ்நிலையொன்றை உருவாக்கி, அதன் மூலம் இலாபமடைய ராஜபக்ஷக்கள் முயற்சி செய்கின்றனர் என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்ற போது, வடக்கில் பல்வேறு குற்றச்செயல்களுக்குக் காரணமான ஆவா குழு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் –

கோத்தபாய என்பது முழு இராணுவமும் என்று அர்த்தமல்ல. அதேபோன்று இராணுவ அதிகாரியொருவர் என்பது எல்லா இராணுவத்தினரையும் குறிப்பிடுவதில்லை. இவ்வாறு பார்த்தால், கோத்தபாயவுக்கு எதிரான 'மிக்' கொள்வனவுமோசடி தொடர்பிலும் விசாரிக்க முடியாமல் போகும்.

ஆவா குழுவுடன் கோத்தபாயவுக்கு தொடர்பிருப்பதாக கூறிய தற்கு முழு இராணுவத்தினரையும் இழிவுபடுத்தியதாக என்மீது குற்றம்சாட்டியிருந்தனர். இது நியாயமற்றது. – என்றார். (ம)

# ஜனாதிபதி, பிரதமர் உட்பட பிரமுகர்களை விடாது படம் எடுத்த சந்தேக நபர் கைது!

*விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு*

கொழும்பு, நவ.10

ஜனாதிபதி மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சி ஒன்றில் பத்திரிகையாளர் மாதிரி நடித்துக் கொண்டு சந்தேகத்துக்கு இடமான முறையில் நடந்து கொண்ட படப்பிடிப்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் மேற்படி சந்தேகநபர் நேற்று முன்னிலைப்படுத்தப் பட்ட போது அவரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்ற இசைமேதை டபிள்யூ.டி.அமரதேவவின் இறுதிக்கிரியைகளில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்கள் உட்பட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர்.

அச்சமயமே மிக முக்கிய பிரமுகர்களை பிரஸ்தாப சந்தேக நபர் கலைத்துக் கலைத்துப் படம் எடுத்துக் கொண்டிருந்தாராம்.

அவர் மீது சந்தேகப்பட்ட ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினர் அவரைக் கைது செய்தனர்.

கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த சப்புமல் தேவிந்த குமார என்ற இந்தச் சந்தேக நபரைப் பின்னர் கொழும்பு கறுவாக்காடு பொலிஸில் ஒப்படைத்தனர்.

சந்தேக நபர் பற்றிய விசாரணைகளை கறுவாக்காடு பொலிஸாரிடம் இருந்து கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் ஏற்றுக் கொண்டனர்.

மூன்று நாள்கள் பொலிஸ் விசாரணையின் பின்னர் சந்தேக நபர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

சந்தேக நபர் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் முன் ஆஜர் செய்யப்பட்டார் என்றும் அவரது உடல், உள நிலைமை தொடர்பான மருத்துவப் பரிசோதனை அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

அவரது தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பான விசாரணைகளும் இடம்பெறுகின்றன என்றும் பொலிஸ் தரப்பால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

# சப்பாத்துக்கள் அணியாத மாணவரின் பாதணிகள் கழற்றி எரிக்கப்பட்டனவா?

*கிளிநொச்சிப் பாடசாலையொன்றில் சம்பவம்*

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றில் தரம் 11 இல் கல்வி கற்கும் 24 மாணவர்களின் காலணிகள் பாடசாலையின் ஒழுக்கத்திற்குப் பொறுப்பான ஆசிரியரால் தீ வைத்துஎரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 3 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும் பாடசாலை அதிபர் இந்தச் சம்பவத்தை மறுத்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

கிளிநொச்சி, கண்டாவளை கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவர்களில் 24 மாணவர்கள் கடந்த 3 ஆம் திகதி பாடசாலைக்குச் செல்லும் போது சப்பாத்து அணியாமல் 'செருப்பு, சாண்டில்ஸ் உள்ளிட்ட காலணிகளை அணிந்து சென்றனராம்.

பாடசாலையின் ஒழுக்கத்திற்குப் பொறுப்பான ஆசிரியர் அந்த 24 மாணவர்களினதும் காலணிகளையும் கழற்றி பை ஒன்றினுள் போட்டு பாடசாலைக்குப் பின்புறமாகக் கொண்டு சென்று தீ மூட்டினார்.

இதனை சில மாணவர்கள் அழுதவாறு தொலைவில் நின்று பார்த்தபோது அந்த ஆசிரியர், "தூரத்தில் நின்று பார்க்காதீர்கள். கிட்ட வந்து காலணிகள் எரிவதைப் பாருங்கள்" என்று கூறினார் என்று கூறப்படுகின்றது. இந்தச் செயற்பாடு மாணவர்களை மிகவும் பாதித்துள்ளது என்று அவர்களின் பெற்றோர்கள் கூறுகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாடசாலையின் அதிபரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வினவியபோது –

மாணவர்கள் அணிந்துவந்த காலணிகளை ஒழுக்கத்திற்குப் பொறுப்பான ஆசிரியர் பெற்றுக்கொண்டமை உண்மை. அவற்றை எரியூட்டப் போவதாகக் கூறியே பெற்றுக்கொண்டார். ஆனால் எரியூட்டவில்லை. அதனை நாம் மாணவர்களிடம் வழங்குவோம்.– என்றார்.

ஆனால், நேற்றுவரை காலணிகள் வழங்கப்படவில்லை என்று பெற்றோர் கூறுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக பெற்றோர்கள் தெரிவிக்கையில்-

பின்தங்கிய பிரதேசங்களில் வசிக்கும் நாங்கள் அன்றாடம் கூலித்தொழில் செய்துதான் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துகின்றோம். இந்த நிலையில், எமது பிள்ளைகள் அணிந்து வந்த பாதணிகளை ஆசிரியர் பறித்து எரித்தமை எங்களை கவலையடையச் செய்துள்ளது.– என்றனர்.

அண்மையில், கிளிநொச்சி பாரதிபுரம் பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் சப்பாத்துக்களை அணியாமல் சென்ற மாணவர்களின் செருப்புக்கள், சாண்டில்கள் கழற்றப்பட்டு பிரதான வீதியில் குவிக்கப்பட்ட சம்பவம் பல தரப்பினர் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், மேற்படி பாதணிகள் எரிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பெற்றோர் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம- 70)

## எருக்கலம்பிட்டியில் குடும்பஸ்தர் கஞ்சாவுடன் கைது



மன்னார் எருக்கலம்பிட்டிப் பகுதியில் கஞ்சாப் பொதியுடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7.00 மணியளவில் கஞ்சா கடத்தப்படுவதாக மன்னார் மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்தது.

இந்தத் தகவலின் அடிப்படையில் எருக்கலம்பிட்டி பொலிஸாரின் உதவியுடன் வீடு ஒன்றினைச் சுற்றிவளைத்த போது பை ஒன்றில் வைத்துக் கடத்த முற்பட்ட 2.342 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது. அதனையடுத்து அதே இடத்தைச் சேர்ந்த 42 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-40)

# இராணுவம் எந்தக் குற்றமுமே இழைக்காததால் எந்த விசாரணையையும் எதிர்கொள்ளத் தயார்!

## யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மகேஷ் சேனநாயக்க தெரிவிப்பு



கொழும்பு,நவ.10

இலங்கைப்படைகள் யுத்தக் குற்றம் எதையும் செய்யவில்லை. எனவே, யுத்தக் குற்றச்சாட்டு விசாரணை எதற்கும் முகம்கொடுக்க நாம் தயார். அது சர்வதேச ஆணைக்குழு என்றாலும் தேசிய ஆணைக் குழு என்றாலும் எமக்குப் பிரச்சினை இல்லை.

–இவ்வாறு தெரிவித்திருக்கிறார் யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க. கொழும்பு சிங்களப் பத்திரிகையான 'மௌபிம' நாளிதழுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

அந்தப் பத்திரிகைக்கு அவர் மேலும் தெரிவித்திருந்தவை வருமாறு :–

எமது இராணுவம் ஒழுக்க விழுமியங்களால் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. எமது கடமையை நாம் மிகச் சரியாகவே ஆற்றி வந்துள்ளோம். எனவே, எம்மீது குற்றம் சுமத்த எதுவுமில்லை.

யுத்தச் சூழ்நிலையில் தவறிழைக்கப்பட்டிருந்தால், அப்படித் தவறிழைத்தவர்கள் யாராக இருப்பினும் குற்றம் குற்றமே. இதில் கடற்படை, விமானப் படை, இராணுவச்சிப்பாய், அதிகாரி என்று எவ்வித வேறுபாடும் இல்லை.

யுத்த காலப் பகுதியிலோ அல்லது அதற்குப் பின்னரான காலத்திலோ, தீவிரவாதிகளைத் தாக்குவதற்கு அல்லாமல், வேறெந்தநோக்கிலாவது படைத் தரப்பினர் சமூக விரோதச் செயற்பாடுகளிலோ அல்லது தவறான நடத்தைகளிலோ ஈடுபட்டார்கள் என அடையாளம் காணப்பட்டால் அவர்கள் உடனடியாகச் சட்டத்துக்கு முன் கொண்டு வரப்படுவார்கள்.

எமது படையினர் எந்த யுத்தக் குற்றமும் புரியவில்லை. தவறிழைக்கவுமில்லை. எனவே, எந்த விசாரணைக்கு முகம் கொடுக்கவும் நாம் தயார்.

**ஆவா குழு விவகாரம்**

இன்று மக்கள் சமாதானமாக வாழ்கின்றார்கள். அவர்கள் மத்தியில் ஜனநாயகம் கட்டி எழுப்பப்படுகின்றது.

தென்னிந்தியத் திரைப்படங்களில் அதிகம் காட்டப்படும் வன்முறைப்பாணி நடவடிக்கைகள் இங்கும் தலையெடுத்துள்ளன. அங்குள்ளமை போன்று வன்முறைக் குழுக்கள் இங்கும் தோற்றம் பெற்றுள்ளன.

'ஆவா குழு' என்பது ஒரு தீவிரவாத அமைப்பு அல்ல. இளைஞர்கள் சிலர் போதையில் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இன்று யாழ் மண்ணில் அதிக மதுபான சாலைகள் தோற்றம் பெற்றுள்ளமையை மறுக்க முடியாது.

வடக்கில் இருப்பதை விட தெற்கில் அதிக எண்ணிக்கையான பாதாள கோஷ்டிகள் காணப்படுகின்றன. அக்குழுக்கள் மூலம் நீங்கள் ஏதும் சாதிக்க வேண்டும் எனில் கோடிக் கணக்கான பணத்தை வழங்க வேண்டும். ஆனால், இங்கு வடக்கில் அதே வேலையைக் குறைந்த தொகைப் பணத்தை வழங்கி சாதித்து வருகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சமாதானத்தையும் சட்டத்தையும் பேணிக் காப்பது இலங்கைப் பொலிஸாரின் பொறுப்பாகும். அவர்களுக்கு நாம் உரிய ஒத்துழைப்பை வழங்குவோம்.

கைதடியிலும் இவ்வாறான தொரு சம்பவம் நடந்தேறியுள்ளது. இரவு மதுபோதையில் சென்று வீடொன்றைத் தாக்கியுள்ளனர். வீட்டைத்தாக்கும் போது நாம் 'ஆவா' என்றும் கூறியுள்ளனார். இவ்வாறான செயற்பாடுகளை தவிர்க்க நாம் பொலிஸ் அதிகாரிகளுடன் இணைந்து ஒற்றுமையாக செயற்பட வேண்டும். குறுகிய காலத்தில் சமூகத்தில் இருந்து 'ஆவா' எனும் சொல் நீக்கப்பட்டு விடும். – இவ்வாறு யாழ்ப்பாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க அந்தப்பேட்டியில் தெரிவித்திருக்கின்றார். (11)

# உள்ளூராட்சித் தேர்தல் இந்த ஆண்டில் நடக்காதாம்!

கொழும்பு,நவ.10

எவ்வளவுதான் அழுத்தம் கொடுத்தாலும் இந்த ஆண்டில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தமுடியாது எனதேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணையகத்தில் நேற்றுநடைபெற்றசெய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் தேர்தலை நடத்த வாய்ப்புகள் உள்ளதாகவும், கிழக்கு, வடமத்திய மற்றும் வடமேல்மாகாண தேர்தலைநடத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை தேர்தலை பிற்போடுவது மக்களின் வாக்குரிமையை தடுக்கும் செயற்பாடாகும் எனத் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் இந்த ஆண்டு இறுதிக்குள் எல்லை மீள்நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையும், தேர்தல் கலந்தாய்வுக் குழுவின் அறிக்கையில் வெளிப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

# நெளுக்குளம் வைத்தியசாலைக்கு நுளம்பு வலைகள் அன்பளிப்பு

வவுனியா, நவ.10

நெளுக்குளம் ஆயுள்வேத வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களின் நலன் கருதி கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் கிராமத்தைச் சேர்ந்த விஸ்வலிங்கம் கோமதி தம்பதியினர் நேற்று 20 நுளம்பு வலைகளை இலவசமாக வழங்கியுள்ளார்கள்.

விஸ்வலிங்கம் இந்த வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று குணமாகியவர்களில் ஒருவர். நெளுக்குளம் ஆயுள்வேத வைத்தியசாலையில் தங்கி இருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் நுளம்புக்கடியால் அவதியுறு



வது பற்றிய செய்தி 'காலைக்கதிரில் வெளியாகியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ–12)

# இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து கருத்தரங்கு

ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் ஏற்பாட்டில் "தேசிய பிரச்சினையைஎப்படித்தீர்ப்பது"என்ற தலைப்பின் கிழ் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய சிறப்புரையும், ஜனநாயக மாக்ஸிஸ, லெனினிசக் கட்சியின் செயலாளர் எஸ்.கே.செந்தில்வேல் அதிதி உரையையும் நிகழ்த்துவார்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இரு மாண வர்கள் பொலிஸாரால்கொலைசெய்யப் பட்டமையைக்கண்டித்தல், அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், உட்படபலவிடயங்கள் குறித்து அங்கு பேசப்படும்.

# பயணிக்கமுடியாத நிலையில் கிளிநொச்சி பாரதிபுர வீதி



கிளிநொச்சி பாரதிபுர வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாது உள்ளது. இதனூடாகப் பயணிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதியில் பயணிப்பதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதனைத் திருத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பலமுறை அறிவிக்கப்பட்ட போதும் எவ்விதமான பலனும் இல்லை என ஊர்மக்கள் தெரிவித்தனர். மழை நீர் தேங்கி நிற்கும் வேளைகளில் இந்த வீதியினூடாக வாகனங்களைக் கொண்டு செல்வது மிகக் கடினமான விடயம்.

சம்பந்தப்பட்ட அதிகர்ரிகள் இதனை கருத்தில் கொண்டு விரைவாக இந்த வீதியை புனரமைத்து தருமாறு பாரதிபுர மக்கள் கேட்டுள்ளனர்.

# வள்ளுவர் சிலைக்கு இந்தக் கதி!



கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்கு திருவள்ளுவர் சிலை ஒன்று வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அந்தச் சிலை தகுந்த இடத்தில் நிறுவப்படாமல் மூடிக் கட்டப்பட்டு ஒரு மூலையில் வைக்கப்பட்டுள்ளது. வி.ஜி.பி உலக தமிழ்ச் சங்க அமைப்பினால் இந்தச் சிலை வழங்கப் பட்டிருந்தது. இலங்கைக்கு வழங்கப்பட்ட பல இலட்சம் பெறுமதியான 16 திருவள்ளுவர் சிலைகளில் இதுவும் ஒன்று. (இ–12)

# ஒலுவில் துறைமுக அபிவிருத்திப் பணியால் கடலில் மூழ்கும் அம்பாறைக் கரையோரம்!





அம்பாறை, நவ.10

ஒலுவில் துறைமுக அபிவிருத்தியால் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்கள் கடலுக்குள் மூழ்கும் அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் கடலரிப்பு ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. ஒலுவிலில் தொடங்கிய கடலரிப்பு நிந்தவூர். காரைதீவு தாண்டி கல்முனை, பாண்டிருப்புவரை சென்றுள்ளது.

ஒலுவில் துறைமுக கட்டுமானப் பணிகள், குறிப்பிட்ட சிலருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ள போதிலும் பல மக்களின் வாழ்வாதாரத்தையும் நிலத்தையும் இல்லாமல் செய்திருக்கின்றது.

ஒரு புறத்தில் மேற்கொள்ளப்படும் கடலரிப்புக்கான தடுப்பணைகள். மறுபுறத்தில் வாழும் ஏழை மக்களுக்கும் ஏற்கனவே சுனாமியால் பாதிப்புற்று மீண்டெழும் மக்களுக்கும் மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன.

துறைமுகதிட்டப்பணிகளுக்கான செலவை விட அதனால் ஏற்படும் பாதிப்பும் அதனை தடுப்பதற்கான செலவுமே அதிகரித்துக் காணப்படுகிறது என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 – 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 – 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 – 222 2600


## ஆவா குழுவின் மூலத்தை புலிகள் மீது சுமத்தும் புலனாய்வுப் பாணி!

'ஆவா' குழுச் சந்தேகநபர்கள் என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் வைத்து ஏழு பேரைக் கைது செய்த பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் அவர்களில் மூவரைக் கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்துள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நீதிமன்றத்தில் தெரிவித்துள்ள பொலிஸார், அந்தச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக அவர்களை விளக்கமறியலில் வைக்கும் உத்தரவை விடுக்குமாறும் நீதிமன்றத்தைக் கோரினார்.

அச்சமயம் இவ்விடயம் தொடர்பாக இதுவரை தாங்கள் மேற்கொண்ட புலனாய்வு விடயங்கள் பற்றிய அறிக்கை ஒன்றையும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

இந்த விடயம் இப்போது நீதிமன்றத்தின் முன்னால் உள்ளது. எனவே, அது குறித்து எல்லை மீறி விமர்சிப்பது சட்டத் தவறான விடயம். எனவே, எச்சரிக்கையுடனேயே இது பற்றிக் கருத்துக்களை முன்வைக்க விரும்புகின்றோம்.

வடக்கு, கிழக்கில் மட்டுமல்லாமல் தேசிய மட்டத்திலும் அண்மைக் காலத்தில் பரபரப்பையும், கவனிப்பையும் ஈடுபாட்டையும் கவர்ந்த விடயமாக வடக்கு வன்முறைகளும் அவற்றை ஒட்டி வெளியான ஆவா குழு பற்றிய தகவல்களும், அந்த ஆவா குழுவின் பின்னணி தொடர்பில் பிரசித்தமான ஊகங்களும் அமைந்தன.

2015 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அதிகாரத்தில் இருந்தவர்களின் பின்புலத்தில் உருவானதே இந்த ஆவா குழு என்ற பேச்சு - இங்கு மட்டுமல்ல, தென்னிலங்கை அரசியலையே ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருந்த சமயத்திலேயே மேற்படியினர் கைதும் அவற்றைத் தொடர்ந்து, கைது செய்யப்பட்ட சிலர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டமையும் அதைத் தொடர்ந்து நீதிமன்றத்தில் புலனாய்வுப் பொலிஸாரின் விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பும் அரங்கேறியிருக்கின்றன.

இனப்பிரச்சினையால் எழுந்த யுத்தம் முடிவுறுத்தப்பட்டு தேசிய நல்லிணக்கத்துக்கான முன் முயற்சிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்ற படமே தென்னிலங்கை அரசினால் முன்வைக்கப்படுகின்றது. அந்தப் பேச்சை நமது தமிழ் அரசியல் தலைமைகளும் முழு அளவில் நம்பி, விழுங்கி அதையே தமிழ் மக்கள் முன் உறுதியோடு தெரிவித்து வருகின்றன.

இந்தச் சமயத்தில்தான் இப்போது ஆவா குழுவின் பின்னணி யார் என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் சாரப்பட ஓர் அறிக்கை புலனாய்வுப் பொலிஸாரினால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

பொலிஸாரின் புலன் விசாரணை ஒன்று நீதியாக - நேர்மையாக - நடத்தப்பட வேண்டுமானால், அதில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது என்பது உண்மையே. அது ஆவா குழுவின் மூலம் பற்றிய விசாரணைக்குப் பொருந்தும்.

ஆனால், அத்தகைய - தேசிய அளவில் அதீத கவனிப்புக்கு உள்ளாகியிருக்கும் - உணர்வுபூர்வமான வெளிப்பாடுகளைத் தட்டிவிடும் மிக நுணுக்கமான - ஆவா குழு போன்ற பிரச்சினைகள், தேசிய நல்லிணக்கத்துக்கு குந்தகம் விளைவிக்கும் தரப்புகளினால் தவறான முறையில் பயன்படுத்தப்படாமல் பார்த்துக் கொள்ளுவதும் - உறுதி செய்வதும் - அரசுத் தலைமையின் பொறுப்பாகும்.

இப்போது ஆவா குழு விவகாரத்தை ஒட்டிப் புலனாய்வுப் பிரிவினரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை அந்தப் புலனாய்வு விசாரணைகளின் போக்குக் குறித்து, பலத்த சந்தேகங்களை - ஐயத்தை - தமிழர் மத்தியில் கிளப்பியிருக்கின்றது என்பதைப் பதிவு செய்வது பொருத்தமானது.

யுத்த காலத்தில் எல்லாக் குற்றக் கணக்குகளையும் - 'செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியார் கணக்கில்' என்பது போல - விடுதலைப் புலிகள் மீதே சுமத்திவிடும் ஒரு பாங்கைத் தென்னிலங்கையின் பாதுகாப்புப் பிரிவினரும் - பொலிஸாரும், அரசுத் தலைமையும் - ஏன் தெற்குப் பொதுமக்கள் தரப்பும் கண்மூடித்தனமாக முன்னெடுத்தன.

தேசிய நல்லிணக்கத்துக்கான - இன சௌஜன்யத்துக்கான - முன்முயற்சி எடுக்கப்பட்டிருக்கும் இச்சமயத்தில் அத்தகைய போக்கு கைவிடப்பட்டிருக்கும் என்றே தமிழ் மக்கள் நம்பினர்.

ஆனால், வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியமை போன்றே இப்போது செய்தி வந்திருக்கின்றது.

'ஆவா குழுவின் பின்னணியில் முன்னாள் புலி உறுப்பினர்களே உள்ளனர். அவர்களின் ஆலோசனைகளுக்கு அமைய புலிகள் இயக்கத்தை மீள உருவாக்கும் முகமாக ஆவா என்ற பெயரில் ஆயுதக் குழு உருவாக்கப்பட்டுள்ளது' - என்றெல்லாம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புலனாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அந்தப் புலனாய்வு அறிக்கை உண்மையானால் அது மிக 'ஸிரியஸான' விடயம்.

அப்படி இல்லாமல், முன்னைய ஆட்சிக் காலத்தில் அதிகாரத் துஷ்பிரயோகம் செய்த சில தரப்புக்களைக் காப்பாற்றுவதற்காக இப்படியான தேசிய முக்கியத்துவம், வாய்ந்த விடயத்தில் புலனாய்வாளர்களினால் புலுமாசு விடப்படுமானால் அதனால் நாட்டுக்குப் பேராபத்து. இன நல்லிணக்கத்துக்கு பெரிய ஆப்பு.

இந்தப் புலனாய்வுப் போக்குக் குறித்து அபாயச் சங்கு ஊதுவதும், அதனை ஆளும் அரசுத் தலைமைக்குச் சுட்டிக்காட்டுவதும் எமது கடமையாகின்றது.

## தையிட்டி கணையவில் பிள்ளையார் ஆலயத்தில் இருந்த பெறுமதியான பொருள்கள் மாயமாகின



26 வருடங்களாக உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்த தையிட்டி – கணையவில் பிள்ளையார் ஆலயத்தின் சாமி விக்கிரகங்கள், காணி விடுவிக்கப்பட்ட சில நாள்களில் காணாமற் போயுள்ளன.

மேலும், சுவாமி வாகனங்கள், மணிகள், பொறுமதியான பொழிகற்கள் என்பவையும் ஆலயத்தில் இருந்து திருடப்பட்டுள்ளன.

விடுவிக்கப்பட்ட இந்தப் பகுதியில் இரவு வேளைகளில் யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. அங்கு இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் இப்பொருள்கள் காணமற்போனமைக்கான முழுப் பொறுப்பையும் இராணுவத்தினரே ஏற்க வேண்டும் என ஆலயத்தைச் சார்ந்தவர்களும் அந்தப் பகுதி பொதுமக்களும் கூறுகின்றனர்.

1990ஆம் ஆண்டு வலி.வடக்கில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் கடந்த 1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஒரேயொரு நாள் தையிட்டி - கணையவில் பிள்ளையார் ஆலயத்தை பார்வையிடுவதற்கு ஆலய நிர்வாகத்தினர் மற்றும் அவ்வூர் மக்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

அப்போது ஆலயத்தில் சாமி விக்கிரகங்கள், வாகனங்கள், பெறுமதி வாய்ந்த கற்கள் உள்ளிட்ட சொத்துக்கள் அங்கே இருந்தன என அவ்வூர் மக்கள் தெரிவித்தனர்.

ஆனால், அண்மையில் தையிட்டிப் பகுதி விடுவிக்கப்பட்டபோது அங்கு சென்ற மக்கள் ஆலயத்தில் இருந்த பல சாமி விக்கிரகங்கள் உள்ளிட்ட பெரும்பாலான பொருள்கள் காணாமற்போயிருந்தமையைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

எனினும், சில சாமி விக்கிரகங்கள் ஆலயத்தில் எஞ்சியிருந்தமையைக் கண்டு அவர்கள் சற்று ஆறுதல் அடைந்தனர். அத்துடன் தலை இல்லாத சூரன், சுவாமி வெளிவீதி வலம் வரும் காராம்பசு வாகனம் ஆகியன அங்கு இருந்தன என அவர்கள் கூறினர்.

ஆனால், மீண்டும் சென்று பார்த்தபோது அவையும் முற்று முழுதாக அங்கிருந்து திருடிச் செல்லப்பட்டுள்ளன என அவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

இந்த ஆலய கருவறை இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட தனி பொழி கற்களால் முற்று முழுதாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. நிர்மாணப் பணிகள் முடிய எஞ்சிய பொழிகற்களும் ஆலயத்துக்குள்ளேயே வைக்கப்பட்டிருந்தன. அந்தக் கற்கள் கூட அங்கிருந்து ஏற்றிச் செல்லப்பட்டுவிட்டன எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

எமது பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டு சில நாள்களே ஆகும் நிலையில் இரவோடு இரவாக எஞ்சியிருந்த விக்கிரகங்கள் உள்ளிட்ட ஆலய சொத்துக்களும் களவாடப்பட்டுள்ளன.

படைத் தரப்பினரின் கண்காணிப்பில் குறித்த பகுதி இன்னமும் உள்ளது. இரவில் யாரும் அங்கு அனுமதிக்கப்படுவதில்லை. இந்த நிலையில் ஆலயத்தில் எஞ்சியிருந்தவையும் காணா மற்போயுள்ளன. இதற்கான முழுப் பொறுப்பையும் இராணுவத்தினரே ஏற்க வேண்டும் எனவும் தையிட்டி மக்கள் தெரிவிக்கின்றனர்.

## தென்பகுதி மீனவரின் குடியேற்றத்தை எதிர்த்து மன்னார் முசலி மீனவர்கள் நேற்று போராட்டம்

### அரச அதிபருக்கு மனுக் கையளிப்பு





மன்னார், நவ.10

மன்னார் முசலிப் பிரதேசப் பகுதியில் தென்பகுதி மீனவர்களை குடியேற்ற எடுக்கும் முயற்சியை கைவிடக் கோரி முசலிப் பகுதி மீனவர்கள் நேற்று புதன்கிழமை போராட்டம் ஒன்றை நடத்தினர்.

மன்னார் மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தின் அனுசரணையுடன் முசலிப்பிரதேச கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினால் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நூற்றுக்கணக்கான மீனவர்கள் கலந்து கொண்ட இந்தப் போராட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், வட மாகாண சபை உறுப்பினர்கள் றிஷாட் பதியுதீன், வைத்திய கலாநிதி குணசீலன், மன்னார் மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவர் என்.எம்.ஆலம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் பெனடிற் குரூஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்

முசலி பஸ் நிலையத்திலிருந்து முசலிப் பிரதேச செயலகம் வரை சென்ற இந்தப் போராட்டக் குழுவினர் 'வெளி மாவட்ட மீனவர்களை நிரந்தரமாக குடியேற்றாதே', 'எங்கள் கடல் வளத்தை எங்களிடமே விட்டு விடு', 'யுத்தத்தால் அழிவுற்ற எமது பிரதேசத்தை கட்டி எழுப்ப அரசே உதவி செய்', 'எங்கள் வாழ்வாதாரத்தை வெளி மாவட்ட மீனவர்கள் சுரண்டிச் சென்று எங்களை வறுமைக் கோட்டுக்குள் தள்ளாதே' என்ற வாசகங்கள் பொருந்திய பதாகைகளை ஏந்திச் சென்றமையுடன் கோஷங்களையும் எழுப்பிச் சென்றனர்.

முசலிப் பிரதேச செயலகத்துக்குச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் மன்னார் மாவட்ட அரச அதிபருக்கான மகஜர் ஒன்றை முசலிப் பிரதேச செயலாளர் செ.கேதீஸ்வரனிடம் கையளித்தனர். மேலும், போராட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் மகஜர்களின் பிரதிகள் கையளிக்கப்பட்டன. (ம –112)

### நாளை

11.11.2016
வெள்ளிக்கிழமை
திதி : துவாதசி பி.இ. 3.04 வரை
நட்சத்திரம் : உத்தரட்டாதி
மு.இ. 10.05 வரை
சுபநேரம் 06.06 – 07.36
இராகுகாலம் 10.36 – 12.06

# வடக்குக்கு உதவத் தயார்!

## கனடா – ஒட்டாவா அதிகாரிகள் குழு யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ.10

வடக்கின் அபிவிருத்திகளுக்குத் தேவையான நிதி உதவிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கத் தயாராக உள்ளோம் என்று கனடா நாட்டின் ஒட்டாவா தலைமையக அதிகாரிகள் குழு தெரிவித்துள்ளது.

கனேடிய வெளிவிவகாரங்கள், வெளிநாட்டு அலுவல்கள், வியாபாரம் மற்றும் அபிவிருத்திப்பிரிவு ஆய்வாளர் மக்லாரன் மற்றும் கனேடிய அரசியல் உயர் ஆலோசகர் அலுவலகத்தின் ஆய்வாளர் ஜவாத் குரேஷி ஆகியோர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தனர்.

இந்தக் குழுவினர் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனை, யாழ். மாவட்டச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலின் போது இவ்வாறு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது, மத்திய அரசால் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், வாழ்வாதார உதவித்திட்டங்கள் தொடர்பில் அந்தக் குழுவினருக்கு அரச அதிபர் தெளிவுபடுத்தினார்.

இதேவேளை, குறித்த குழுவினர் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையும் அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் வடக்கின் அரசியல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கிண்ணியா துறையடியில் புத்தர் சிலை அமைப்பதற்கான பணிகள் மும்முரம்

திருகோணமலை, நவ.10

நல்லாட்சி அரசின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா துறையடியில் புத்தர் சிலை வைப்பதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.


இதற்கான கட்ட நிர்மாணப் பணிகள் தற்போது துரிதமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன என்று பல தரப்பிலும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் பெரிதும் அச்ச நிலைக்கு ஆளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா, சின்னம் பிள்ளைச்சேனை, வெள்ளைமணல், நாச்சிக்குடா கருமலையூற்று என்பன முஸ்லிம்கள் முழுமையாக வாழும் பகுதி.

இந்தப் பிரதேசத்தில் ஒரு சில பௌத்த குடும்பங்கள் கிண்ணியா துறையடியில் வசிக்கின்றன. இந்த நிலையில், இங்கு புத்தர் சிலை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இது முஸ்லிம்களின் பூர்வீகத்தை முற்றாக சுரண்டும் செயற்பாடு என்று முஸ்லிம் மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில், அரசியல் தலைமைகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கேட்டுள்ளனர். இது குறித்து அரசியல் தலைவர்கள் பாராமுகமாக இருப்பது கவலையளிக்கிறது என்றும் சட்ட ரீதியான நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் எனவும் மக்கள் கூறுகின்றனர். (ஐ-130)



## கட்டுநாயக்கா விமான நிலையத்தில் மூடப்படுகின்றன இரு பகுதிகள்

கொழும்பு, நவ.10

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பயணிகள் வெளியேறும் மற்றும் வருகைதரும் பிரதேசம் என்பவை அபிவிருத்திப் பணிகளின் காரணமாக மூடப்படவுள்ளன என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

புதிய குடிவரவு பிரதேசம் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் விற்பனை செய்யும் பகுதி, என்பவற்றை அபிவிருத்தி செய்ய அமைச்சரவை நிலையியில் கொள்முதல் சிபாரிசுடன் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவால் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

அந்த யோசனைக்கு அனுமதி கிடைத்துள்ளது என்று ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டம் முடிவடையும் வரை கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மூடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

கட்டுநாயக்கா விமான நிலையம் மூடப்படுவதால் பதில் விமான நிலையமாக மத்தல விமானநிலையம் பயன்படுத்தப்படுமா? என ஊடகவியலாளர்களால் இதன் போது கேள்வியெழுப்பப்பட்டது.

இது குறித்து விரைவில் தெரிவிக்கப்படும் என்று அமைச்சர் பதிலளித்தார். (ஐ)



வடக்கு, கிழக்கில் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட 182 உறுப்பினர்களைக் கொண்டு 'உயிரிழை' அமைப்பு இயங்குகின்றது. 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் அமைப்பு வவுனியாவில் வாடகைக்கு ஓர் இடத்தைப் பெற்று இயங்கி வருகின்றது. முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்கான அமைப்புக்கு சொந்தக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் வைத்திய கலாநிதி சிவதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைப்பானது கடந்த மாதம் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசாவிடம் தமது அலுவலகத்தை அமைப்பதற்கான நிதியைக் கேட்டிருந்தது. கனடா வாழ் புலம்பெயர் உறவுகளது பிரம்டன் தமிழ் ஒன்றிய அமைப்பின் ஊடாக நிதி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் இதற்கான ஒரு காணியை ஒழுங்குபடுத்தித் தருமாறும் எம்.பி கோரியிருந்தார்.

அதற்கு அமைவாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவினுள் அடங்கும் பனிக்குளம் கிராமத்தில் ஏ – 9 வீதியை அண்டி காணி அடையாளப்படுத்தப்பட்டு பிரதேச செயலாளரால் இந்த அமைப்புக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கை வரும் சுற்றுலா பயணிகள் அதிகரிப்பு!

கொழும்பு, நவ.10

இலங்கைக்கு கடந்த ஒக்ரோபர் மாதத்தில் வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 13.7 வீத அதிகரிப்பு பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதில் ஜேர்மன், இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளில் இருந்து வருகை தந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 50,419 ஆகும்.

நடப்பாண்டின் முதல் 10 மாதங்களிலும் இலங்கைக்கு 1.4 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இது கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 14.6 மில்லியன் அதிகரிப்பாகக் கருதப்படுகின்றது என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ஐ)

# உதய கம்மன்பில வெளிநாடு செல்ல நீதிமன்றம் அனுமதி



நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில வெளிநாடு செல்வதற்கான அனுமதியை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று வழங்கியுள்ளது.

ஜப்பானில் இடம்பெறவுள்ள கருத்தரங்கு மற்றும், இந்தியாவில் நடைபெறவுள்ள திருமண வைபவம் ஒன்றுக்கும் செல்லவுள்ளதால் அதற்கான அனுமதியை வழங்குமாறு கம்மன்பில தனது சட்டத்தரணி மூலம் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆஸ்திரேலிய பிரஜை ஒருவருக்கு சொந்தமான நிறுவனம் ஒன்றின் பங்குகளை மோசடி செய்து விற்பனை செய்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட உதய கம்மன்பில பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். இந்த நிலையில் கடவுச்சீட்டு கடுவல நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கிழக்குப் பல்கலைக்கழக வழக்கு ஒத்திவைப்பு

திருகோணமலை, நவ.10

கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு விசாரணைகளை எதிர்வரும் ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றம், ஒத்திவைத்துள்ளளது.

இதற்கு ஆயத்தமாக வருமாறு பல்கலைக்கழக நிர்வாகத்தையும் வழக்காளியையும் நீதிமன்றம் பணித்துள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் 2008ஆம் ஆண்டு ஆரம்பத்தில் கட்டப்பட்ட பல கட்டடங்களுக்கான ஒப்பந்த நிதி ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படாமைக்கு எதிராக திருகோணமலையைச் சேர்ந்த கட்டட ஒப்பந்த நிறுவனமான றோயல் கொன்ஸ்றக்ஷன் வழக்கு தாக்கல் செய்திருந்தது.

இந்த வழக்கை கடந்த 3 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மாவட்ட நீதிபதி எம். அப்துல்லா, இந்த வழக்கின் விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 31ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவித்தார்.

2008ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தில் 4 கட்டடத் தொகுதிகளை சுமார் 25 மில்லியன் ரூபாவுக்கு ஒப்பந்தம் செய்து பணியை முறைப்படி முடித்தபோதும், இன்னும் 10 மில்லியன் ரூபா நிர்வாகத்திடம் இருந்து வரவேண்டியுள்ளது.

அவை இன்னும் வழங்கப்படவில்லை என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# கட்டாக்காலிகளால் விபத்து கட்டுப்படுத்த விசேட ஏற்பாடு

## மட்டக்களப்பு மாநகர சபை முன்னெடுப்பு

மட்டக்களப்பு, நவ.10

மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்டாக்காலி மாடுகளால் ஏற்படும் வீதி விபத்துக்களைத் தடுக்கும் வகையில் மட்டக்களப்பு மாநகர சபையால் விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்தும் வகையில் மாடு உரிமையாளர்களுக்கு பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதனைத்தொடர்ந்து மாடுகளை வீதிகளில் விடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தநிலையில்வீடுகளில் அலையும் கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் எம்.உதயகுமாரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் மாநகரசபை ஆணையாளர் தெரிவித்ததாவது:

"கல்முனை பிரதான வீதியில் மட்டக்களப்பு நகர் தொடக்கம் நாவற்குடா வரையிலான பிரதான வீதியில் அலைந்த கட்டாக்காலி மாடுகள் நேற்று முன்தினம் இரவு பிடிக்கப்பட்டன.

இவ்வாறு பிடிக்கப்படும் மாடுகள் தொடர்பில் அதன் உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டு தண்டப்பணம் அறவீடு செய்யப்பட்டதன் பின்னரே அவை கையளிக்கப்படவுள்ளன.

கடந்த ஒரு வாரத்தில் 15 இற்கும் மேற்பட்ட மாடுகள் இவ்வாறு பிடிக்கப்பட்டுள்ளன.

அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராகத் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ள நிலையிலும் மீண்டும் மாடுகளை வீதிகளில் விடும் நிலை ஏற்பட்டுள்ளது.

நகரங்களில் மாடுகளை மேய விடமுடியாது என்று சட்டம் உள்ள நிலையிலும் சிலர் அதனைக் கவனத்தில் கொள்வதில்லை"– என்றார். (எ)

# அக்கரைப்பற்றில் ஓட்டோ–கார் விபத்து இருவர் காயம்

அக்கரைப்பற்று, நவ.10

அக்கரைப்பற்று, கல்முனை பிரதான வீதியில் மாட்டுப்பழை பகுதியில் நேற்றுமுன்தினம் முற்பகல் இடம்பெற்ற ஓட்டோ-கார் விபத்தில் பெண் ஒருவர் உட்பட 2 பேர் படுகாயமடைந்தனர்.

அவர்கள் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பொத்துவிலில் இருந்து கல்முனை நோக்கிச் சென்ற ஓட்டோவை அக்கரைப்பற்றிலிருந்து கல்முனை நோக்கிச் சென்ற கார் முந்திச் செல்ல முற்பட்ட போதே இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

படுகாயமடைந்தவர்கள்பொத்துவில் முதலாம் வட்டா ரத்தைச் சேர்ந்தோர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம்தொடர்பில்கார் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (எ)



வாழைச்சேனையில் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கருணைபுரம் பொது விளையாட்டு மைதானத்திலே நேற்று முன்தினம் புதிய தொழிற் சந்தை ஒன்று உதவி பிரதேச செயலாளரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பிரதேச பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் ஒரு அங்கமாக சுயதொழில் சந்தை ஒன்றை சேவை நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அம்கோர் நிறுவனம் இதனை ஏற்பாடு செய்திருந்தது. (எ)

# மரை இறைச்சி வைத்திருந்தவருக்கு அபராதம்

திருகோணமலை, நவ.10

திருகோணமலை, மொறவெவப் பகுதியில் 16 கிலோ கிராம் மரை இறைச்சியை வைத்திருந்த குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டவருக்கு, 20 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் விஷ்வந்த பெர்ணான்டோ, நேற்று முன்தினம் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

மொறவெள– டி1 பகுதியைச் சேர்ந்த கோபால் இலிங்கராா (வயது 35) என்பவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வீட்டில் மரை இறைச்சி விற்பனை செய்து வருவதாகப் பொலிஸ் அவசர அழைப்பு இலக்கமான 119 இற்கு வழங்கிய தகவல் வழங்கப்பட்டது.

அதைஅடுத்து விரைந்த பொலிஸார், மரை இறைச்சியை மீட்டுள்ளதுடன், சந்தேகநபரையும் கைது செய்துள்ளனர். (எ)

# 'ஒற்றுமை மூலமே அரசியல் உரிமை பெறலாம்'

சிறுபான்மையினர் தமது சக சமூகத்தினரது அபிலாஷைகள் மற்றும் அடையாளங்களுக்கு மதிப்பளித்து நடந்து கொள்ள வேண்டும் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

மேலும் வடக்கு, மலையகத்தையும், மலையகம் கிழக்கையும் மதிக்கும் வரை சிறுபான்மையினர் தமது உரிமைகளை வென்றெடுக்க முடியாது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

பொத்துவில் மத்திய கல்லூரியின் ஆய்வுகூடத் திறப்புவிழா, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தநிகழ்வில் அவர் கலந்து கொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

"சிறுபான்மையினர் ஒற்றுமையாகவும் நல்லிணக்கத்துடனும் நடந்துகொள்வதன் மூலமே தமது சமூகத்தின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க முடியும். இனவாதத்தைக்கக்கும் குழுக்கள் மஹிந்த ராஜபக்ஷவுடன் மாத்திரமன்றி தற்போதைய நல்லாட்சியிலும் செயற்பட்டு வருகின்றன. அவர்களை அடையாளங்கண்டு மக்கள் தெளிவுடன் நடந்து கொள்ள வேண்டும்"–என்றார். (எ)

# கிண்ணியாவில் யானை அட்டகாசம் இரவில் செல்வோர் அவதானம்

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மணியரசங்குளத்தை அண்டிய பகுதியில் காட்டு யானைகளின் நடமாட்டம் இரவில் அதிகரித்துள்ளது. இதனால் அந்தப் பகுதியால் பயணிப்போர் மாலை 5 மணிக்குப் பின்னர் அந்த வீதியைத் தவிர்க்குமாறு அங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிண்ணியா மணியரசன் குளத்தின் ஊடாக ஆயிலியடி வான்எல, முள்ளிப்பொத்தானை ஆகிய வீதிகளை பயன்படுத்துபவர்கள் இரவுவேளைக்கு முன்னர் பயணத்தை முடித்துக் கொள்ளுங்கள் என்று அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (எ)

# ஆசிரியர் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு

## கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



அம்பாறை, நவ.10

ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு மிக விரைவில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தேசிய பாடசாலைகளில் இருந்து மாகாணப் பாடசாலைகளுக்கும் மாகாணப் பாடசாலைகளில் இருந்து தேசிய பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களைப் பரிமாற்றிக் கொள்கின்ற நடைமுறை ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளது. இதன்மூலம் விரைவில் ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வு காணப்படும் என்று கூறினார்.

பொத்துவில் அல் கலாம் மகா வித்தியாலயத்தின் தொழில்நுட்ப ஆய்வு கூட திறப்பு விழாவும் புதிய மூன்று மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல்நடும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கை ஒன்றிணைப்பதைவிட தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றிணைய வேண்டும். இதுவே முக்கியமான விடயமாகும். ஏனென்றால் நாம் வெவ்வேறு மதங்களைப் பின்பற்றினாலும் மொழியால் நாம் ஒன்றுபட்டவர்கள். நாட்டில் இரண்டு துருவங்களாக இருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைய முடியுமானால் ஏன் ஒரு மொழி பேசுகின்ற தமிழர்களாகிய நாம் ஒன்றிணையக் கூடாது.

வடக்கிலும் கிழக்கிலும் மாகாண தமிழ் கல்வி அமைச்சர்கள் இருக்கின்றனர் என்பதால்தான் இங்குள்ள பாடசாலைகளை அவர்களுடன் கலந்துபேசி அபிவிருத்தி செய்ய முடிகின்றது.

இந்த நிலை மத்திய, ஊவா மாகாணங்களிலும் ஏற்பட வேண்டும். மாகாணக் கல்வி அமைச்சின் முழுமையான ஒத்துழைப்பு இல்லாமல் கல்வியை அபிவிருத்தி செய்ய முடியாது"– என்றார். (எ)

# பொலிஸ் மறிக்க மூவர் தப்பியோட்டம் முகமூடி தாக்குதலில் ஈடுபட்டவர்களா?

## மோ.சைக்கிள் மீட்பு; வட்டுக்கோட்டையில் பீதி

வட்டுக்கோட்டை, நவ.10

வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் இடம்பெற்ற முகமூடித் தாக்குதலுடன், சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மூவரை பொலிஸார் மடக்கிப் பிடிக்க முயன்ற போது அவர்கள் தப்பியோடியுள்ளனர்.

நேற்று முன்தினம் வட்டுக்கோட்டையில் முகத்தைக் கறுப்புத் துணியால் கட்டியவாறு மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் நடத்திய தாக்குதலில் இருவர் காயமடைந்திருந்தனர்.

இந்நிலையில், வட்டுக்கோட்டை, பொன்னாலை வீதியில் நேற்று அதிகாலை 1.00 மணியளவில் சந்தேகத்துக்கிடமாக மூவர் மோட்டார் சைக்கிளில் வந்துள்ளனர். அவர்களைப் பொலிஸார் மறித்துள்ளனர். அவர்கள் நிற்கவில்லை. மோட்டார் சைக்கிளை போட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளனர். இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டையில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

சந்தேக நபர்கள் விட்டுச்சென்ற மோட்டார்சைக்கிளைக் கைப்பற்றிய வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தின் போது மேலும் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார். வர்த்தகத்தில் ஈடுபடும் ஒருவரே சித்தங்கேணி, துறட்டிப்பனை பிரதேசத்தில் வைத்து தாக்கப்பட்டுள்ளார். அவர் வர்த்தக நிலையத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, முகமூடி அணிந்து வந்த மூவரும் அவரை இடைமறித்துள்ளனர். தாங்கள் வைத்திருந்த கைக் கோடரியால் வர்த்தகரின் மோட்டார் சைக்கிளின் முன் பகுதியைக் கொத்தி மிரட்டல் விடுத்த துடன். அவரிடமிருந்த 2400 ரூபா பணத்தையும் பறிமுதல்செய்துள்ளனர். இதுகுறித்து அவர் பயம் காரணமாக எவரிடமும் தெரிவிக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது. (இ-58)

## பறிபோனது மோட்டார் சைக்கிள்

யாழ்ப்பாணம், நவ.10

வீட்டு விறாந்தையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருட்டுப் போய்விட்டது.

கோண்டாவில் கிழக்கு பிடாரி அம்மன் கோயில் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு திருட்டுப் போன மோட்டார் சைக்கிளின் பெறுமதி 2இலட்சத்து 28ஆயிரம் ரூபா என முறைப்பாட்டாளர் சிவசம்பு தங்கவேலாயுதம் என்பவர் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். வழக்குப் பதிவு செய்துள்ள கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-9)

## ட்ரம்ப்புக்கு மைத்திரி வாழ்த்து



அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப்புக்கு, இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் சமூக வலைத்தளத்திலேயே தன் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். (ஐ)

## வடக்கு, கிழக்கில் 100 விகாரைகள்: அமைச்சரவை அங்கீகாரம் கிட்டியது!

கொழும்பு, நவ.10

வடக்கு மற்றும் கிழக்கில் 100 விகாரைகளை அமைப்பதற்கும் குறைந்த வசதிகளைக் கொண்ட விகாரைகளை புனரமைப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

புத்தசாசன அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை இந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, வடக்குக் கிழக்கில் காணப்படும் குறைந்த வசதிகளைக் கொண்ட விகாரைகளை புனரமைப்பதற்கு சீனாவில் உள்ள பௌத்த சங்கம் ஒன்றின் தலைவர் 20.24 மில்லியன் ரூபா நிதி வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் வடக்கு மற்றும் கிழக்கில் புதிதாக உருவாகும் புத்தர் சிலைகள் மற்றும் பௌத்த விகாரைகள் குறித்து மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். அரசியல்வாதிகளும் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில், புதிதாக உருவாகும் 100 விகாரைகள் எதிர்காலத்தில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

## பேராதனை வைத்தியசாலையின் தாதியர்கள் நேற்று வேலை நிறுத்தம்

கொழும்பு, நவ.10

பேராதனை வைத்தியசாலையின் தாதியர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் நோயாளர்கள் இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமக்கு வைத்தியசாலை நிர்வாகம்வழங்குவதாகக் கூறியசலுகைகளை உடனே நிறைவேற்றுமாறு கோரி அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நிர்வாகம் கடமை தவறியுள்ளமை, சிகிச்சைகளுக்கான கருவிகள் உரியவகையில் பொருத்தப்படாமை, தாதியர்கள் முறையாக வழிநடத்தப்படாமை போன்ற 07 விடயங்களை முன்வைத்து தாதியர்கள் தமது ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

மருத்துவமனை இயக்குநர் முன்னதாக தமக்கு பல உறுதிமொழிகள் அளித்தும் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. அவை நிறைவேற்றப்படும் வரையில் தாம் சேவையில் ஈடுபடப்போவதில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## திருகோணமலை சேருவில பகுதியில் புராதன சிவன் கோயில் கண்டுபிடிப்பு

திருகோணமலை,நவ10

புராதன சிவன் கோயில் ஒன்று இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உறுதியாக கூற முடியாத ஆண்டுகளில் முன்னர் உருவான ஆலயம் இது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


இது செங்கற்களால் நிர்மாணிக்கப்பட்ட புராதன இந்து கோயில் என்று தெரிவிக்கப்படுகிறது. திருகோணமலை சேருவில பகுதியில் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது பொலன்னறுவை காலத்துக்கு உரிய சிவன் கோயில் என்று தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த கோயில் மிகப் பாதுகாப்பான முறையில் காணப்படுகிறது. அதன் அகழ்வுப் பணிகளைத் துரிதப்படுத்திப் புனரமைப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் அதிகாரிகளுக்கு பணிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

11ஆம் 12 ஆம் நூற்றாண்டில் இந்த கோவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கக் கூடும் எனவும் முழுமையாக செங்கற்களால் கோவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது எனவும் தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

2017 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த சிவன் கோயிலின் புனரமைப்பு பணிகள் நிறைவு செய்யப்படவுள்ளது. (ஐ)



யாழ். கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் அமரர் கலாநிதி க.கனகராசாவின் 89 ஆவது அகவை நாளும் நினைவுப் பேருரையும் யாழ்.மாவட்ட சாரணர் சங்கத்தின் மரம் நடும் விழாவும் இம்மாத முற்பகுதியில் நடைபெற்றது. அந்நிகழ்வில் யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தின் ஆணையாளர் செ.தேவரஞ்சன் தலைமையுரை ஆற்றிய வேளை எடுக்கப்பட்ட படம். (இ)

## தடை செய்யப்பட்ட வலைகள் மூலம் மீன்பிடித்தவர்களுக்கு தண்டனை

### நான்கு பேருக்கும் ரூ.5000 அபராதம்

மன்னார் நவ.10

மன்னார்பள்ளிமுனை கிராமத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் கடற்றொழில் திணைக்களத்தால் மீன்பிடிக்குத் தடை செய்யப்பட்டுள்ள தங்கூசி வலைகளைப் பாவித்து மீன்பிடியில் ஈடுபட்ட போது கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாகச் செயற்பட்ட இந் நான்கு மீனவர்களுக்கு எதிராக கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளால் கடந்த செவ்வாய்க்கிழமைதனித்தனியாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கில் நான்குபேரும் தங்கள் குற்றங்களைஏற்றுக்கொண்டனர்.

அதை அடுத்து ஒவ்வொருவருக்கும் தலா 5000 ரூபா அபராதம் விதித்தார் நீதிபதி.

அபராதத் தொகையை உடன் செலுத்தாதவர்கள் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான சொந்தப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (இ-க-112)

## கடை உடைத்து ரூ.70 ஆயிரம் திருட்டு


நெடுந்தீவு, நவ.10

நெடுந்தீவு 10 ஆம் வட்டாரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தின் கூரையைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் லாச்சியில் வைத்திருந்த 70 ஆயிரம் ரூபா பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் இரவு வேளையில் இந்தத் திருட்டுச்சம்பவம் இடம் பெற்றிருப்பதாக நெடுந்தீவு பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸார் தொடர்ந்து விசாரணையை நடத்தி வருகின்றனர். (இ-9)

# நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்த சிலர் தீவிர முயற்சி

## மக்களை அவதானமாக இருக்கக் கோருகிறார் ஜனாதிபதி



கொழும்பு, நவ.10

நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்துவதற்கு பல்வேறு தரப்பினர் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர் என்று குற்றம் சாட்டியுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இது தொடர்பில் நாட்டு மக்கள் அனைவரும் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிங்கள, முஸ்லிம் மக்களின் ஐக்கியத்தைக் குலைத்து சாதாரண பொதுமக்கள் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்துவதற்கு பல்வேறு சூழ்ச்சிகள் நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

காலஞ்சென்ற சங்கைக்குரிய மாதுலுவாவே சோபித தேரர் மறைந்து ஒரு வருடம் நிறைவடைவதை முன்னிட்டு இலங்கை மன்றக்கல்லூரியில்நேற்று முன்தினம் இடம்பெற்ற நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்கவீனமுற்ற படை வீரர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற 4 மாதங்களுக்கு முன்னரே அரசு தீர்மானித்திருந்த போதும், சிலரது அரசியல் தேவைகளுக்காக அந்த அப்பாவிப் படையினரைப் பிழையாக வழிநடத்தி குழப்ப நிலையை உருவாக்க சிலர் முயற்சித்தனர் என்றும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ம)

## நாளை கடைசி வெள்ளி சைவ சமய தீட்சை

யாழ்ப்பாணம் நவ.10

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடாத்தும் சைவ சமய தீட்சை வழமை போல் ஐப்பசி மாத கடைசி வெள்ளிக்கிழமையான நாளை 11 ஆம் திகதி காலை 8 மணிக்கு நீராவியடியில் உள்ள சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆரம்பித்து நடைபெறும்.

சமய தீட்சை பெற விரும்பும் அன்பர்கள் சபையுடன் தொடர்பு கொள்ளும்படி சபையின் செயலாளர் வை. இரகுநாத முதலியார் கோரியுள்ளார்.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் . நவ. 10

திக்கம் மத்திய சனசமூகநிலையத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் ரி.சத்தியமூர்த்தி முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.(இ-7)

## பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 7 பேர் பொலிஸாரால் கைது!

அச்சுவேலி, நவ.10

பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்டிருந்த நிலையில் நீதிமன்ற வழக்கு தவணைக்கு சமுகமளிக்க தவறிய குற்றச்சாட்டில் மல்லாகம் நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஏழு பேரை அச்சுவேலி பொலிஸார் கைது செய்துள்ளனர். செவ்வாய்க்கிழமை இரவு இவர் கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உப பொலிஸ் பரிசோதகர் எஸ்.ஜி. அனில்குமார தலைமையிலான பொலிஸார் விசேட ரோந்துக் கடமையின் போது இந்த ஏழு பேரையும் கைது செய்துள்ளனர். அந்த 7 பேரில் 3 பேர் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. கைதானவர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். (இ-9)

## வெளிவாரி பட்டப்படிப்பை குறைக்கும் அரசின் திட்டத்திற்கு கடும் எதிர்ப்பு

### மாத்தறையில் நேற்று பெரும் போராட்டம்

மாத்தறை, நவ.10

மாத்தறையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பட்டதாரிகள் மற்றும் உயர்தரப் பரீட்சையின் பின்னர் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கிடைக்காத மாணவர்கள் ஒன்றிணைந்து மாபெரும் பாதயாத்திரைப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வெளிவாரிப் பட்டப்படிப்பை குறைப்பதற்காக நல்லாட்சி அரசால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை உடனடியாக அகற்றப்பட வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்தனர்.

மேலும் இது ஒரு மாணவ சங்கம் தனியாக நடத்தும் போராட்டம் அல்ல. ஒன்பது மாணவ சங்கங்கள் இணைந்தே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

எமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் இதனை விட பெரியதொரு எதிர்ப்பை வெளியிடுவோம் என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

மேலும் கல்வி என்பது எமது உரிமை. அது முறையாக கிடைக்காததால் பல மாணவர்கள் எதிர்காலத்தை தீர்மானிக்க முடியாமல் இருக்கின்றனர். எனவே அரசு உடனடியாக எமது கோரிக்கையினை நிறைவேற்ற வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் காரணமாக மாத்தறை காலி வீதியில் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டதோடு போக்குவரத்தும் ஸ்தம்பிதமாகி காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## விடுதியில் குழப்பம் விளைவித்தவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்

சாவகச்சேரி, நவ.10

விருந்தினர் விடுதி ஒன்றில் தங்கி இருந்தவேளை மது போதையில் ஏனைய சுற்றுலாப் பயணிகளுக்கு தொந்தரவு செய்தமை மற்றும் குழப்பத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைதாவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் பிரஸ்தாப நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

சந்தேக நபரை 50ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட் பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிவான் செவ்வாய்க்கிழமை அனுமதியளித்தார்.

அந்த நபர் தொடர்பில் நகர்த்தல் பத்திரம் மூலம் ஆஜரான சட்டத்தரணி ஒருவர் சந்தேக நபருக்கு மனநோய் உள்ளது என்றும் அதன் காரணமாகவே அவர் இவ்வாறு நடந்து கொண்டார் என்றும் தெரிவித்திருந்தார்.

அத்துடன் அந்த நபரைக் கொழும்புக்கு அழைத்துச்சென்று சிகிச்சை வழங்க மனைவி தயாராக இருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவரைப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதியளித்தார். (ஐ-9)

## முதிரை குற்றிகள் வைத்திருந்தவருக்கு அபராதம்

திருகோணமலை, நவ.10

திருகோணமலை மஹதிவுல்வெவ பகுதியில் 21ஆயிரம் 792 ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நபருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் விஷ்வந்த பெர்னாண்டோ உத்தரவிட்டார்.

இவர் மஹதிவுல்வெவ விகாரகம பகுதியைச் சேர்ந்தவராவார்.

விகாரகம காட்டுப் பகுதிக்குள் முதிரை மரங்களை வெட்டி விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என்று கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து அவரது வீட்டுக்கு சென்று சோதனையிட்ட போது முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அவை 21,792 ரூபா பெறுமதியானவை என வனபரிபாலன திணைக்களத்தால் மதிக்கப்பட்டுள்ளது. மொறவெவ பொலிஸார் இது குறித்து நீதிவான் முன்னிலையில் தெரிவித்தனர்.

இதனையடுத்து நீதிவான் 10 ஆயிரம் ரூபாஅபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ஐ-130)

## தேசிய வாசிப்பு மாத நிறைவு நாளும் பரிசளிப்பு நிகழ்வும்...



தேசிய வாசிப்பு மாத நிறைவு நாளும் பரிசளிப்பு நிகழ்வும் சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தில் நடைபெற்றுள்ளது. பிரதம விருந்தினராக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் தாதிய உத்தியோகத்தர் த.ஜெயந்தன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற நூலகர்களான இ.தர்மலிங்கம் மற்றும் எஸ். கணேஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்திய வியாபாரிக்கு அபராதம்



சுன்னாகம், நவ.10

புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டார் என்று இந்தியவியாபாரி ஒருவருக்கு 10ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த அபராதத்தை விதித்துத் தீர்ப்பளித்தார்.

பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்ட புடைவைகளை மீளவும் உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறும் தெல்லிப்பழை பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி துர்க்காபுரம் 8ஆம் கட்டைப் பகுதியில் புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் நாடு திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த இந்தியப் பிரஜை ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்திருந்தனர்.

கைதான வியாபாரி தான் சுற்றவாளி என்று நீதிமன்றில் தெரிவித்தார் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

அவர் தொடர்பில் நீதிமன்றம் இந்தியத் துணைத் தூதரகம் ஊடாக அறிக்கை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

# புனர்வாழ்வு, மகளிர் விவகார திணைக்களங்களை செயல் திறனுடையதாக்குமாறு கோரிப் பிரேரணை

## வடக்கு மாகாண சபையில் சுகாதார அமைச்சர் சமர்ப்பிப்பு



கொழும்பு, நவ. 10

யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில் போரினால் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வு விடயங்களைக் கையாள வடக்கு மாகாண புனர்வாழ்வு மகளிர் விவகார திணைக்களங்களை செயற் திறனுடையவையாக இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் அமர்வில் கலந்துகொண்டு விசேட பிரேரணையொன்றைச் சமர்ப் பித்து உரையாற்றிய அமைச்சர் பெயர்ப் பலகையில் மட்டுமே உள்ள மாகாண புனர்வாழ்வு மகளிர் விவகார திணைக்களங்களை செயற் திறனுடையவையாக்க வேண்டும்.

இந்தத் திணைக்களங்களுக்கு ஆளணியில்லை நிதி ஒதுக்கீடு இல்லை. சுகாதார அமைச்சின் கீழ் மேற்படி திணைக்களங்கள் இருந்தபோது வடக்கு மாகாண திணைக்களங்களுக்கு வாகன கொள்வனவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 5 கோடி ரூபா நிதியை முதலமைச்சரின் அனுமதியுடன் பெற்று அதில் 4 கோடி ரூபாவை புனர்வாழ்வுத் திணைக்களத்திற்கும் மிகுதி ஒரு கோடி ரூபாவை மகளிர் விவகார திணைக்களத்திற்கும் ஒதுக்கீடு செய்தோம்.

இதன்மூலம் வவுனியா சிதம்பர நகர் புதிய குடியேற்ற மக்களுக்கான அரை நிரந்தர வீடுகள் அமைத்தல், வடக்கு மாகாணத்திலுள்ள 650ற்கு மேற்பட்ட விசேட தேவைக்குட்பட்டவர்களுக்கான விசேட மலசலகூடங்கள் அமைத்தல் போன்றவை முன்னெடுக்கப்பட்டன. அதில் பெண்கள் விவகார அமைச்சின் நிதியொதுக்கீடுகளும் பயன்படுத்தப்பட்டன. எனினும் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளுடன் ஒப்பிடுகையில் இந்த நிதியொதுக்கீடுகள் போதா.

போரினால் அனைத்து மக்களும் பாதிக்கப்பட்டனர். அவர்களில் பெண்கள், சிறுவர்கள், விசேட தேவைக்குட்பட்டவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. இடம்பெயர்ந்தவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள், பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான விசேட செயற்திட்டங்கள், விசேட தேவைக்குட்பட்டவர்களுக்கான திட்டங்கள் போன்றவற்றை நடைமுறைப்படுத்த மாகாண புனர்வாழ்வுத் திணைக்களமும், மகளிர் விவகார திணைக்களமும் செயற் திறனுடையவையாக்க வேண்டும்.

சுகாதார அமைச்சின் கீழ் இந்த திணைக்களங்கள் இயங்கியபோது அவற்றிற்கான ஆளணியை உருவாக்க மத்திய அரசிடம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் இதுவரை அவை கைகூடவில்லை.

எனவே இந்தப் பிரேரணையினூடாக இரண்டு திணைக்களங்களின் ஆளணி, நிதியொதுக்கீடு என்பவற்றை அதிகரிக்க ஆவன செய்யப்பட வேண்டும்.- எனத் தெரிவித்தார்.

# முஸ்லிம் தனியார் சட்ட விவகாரத்தை சாதகமான முறையில் கையாளுங்கள்

## புத்திஜீவிகளிடம் இம்ரான் மஹ்ரூப் எம்.பி. கோரிக்கை

திருகோணமலை, நவ.10

முஸ்லிம் தனியார் சட்ட விவகாரத்தை சாதகமான முறையில் கையாள்வதற்கான நடவடிக்கைகளில் புத்திஜீவிகள் இறங்க வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை மாலையில் திருகோணமலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும்போது தெரிவித்தவை வருமாறு:-

முஸ்லிம் தனியார் சட்டத்தில் மாற்றம் தேவை என்ற புரிதல் பல மட்டங்களிலும் சூடுபிடித்துள்ள ஒரு விவகாரம். கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக எந்த விதமான சீர்திருத்தங்களுக்கும் உட்படாத ஒரு நிலையில் இந்தச் சட்டம் காணப்படுகின்றது.

ஏனைய சட்டங்கள் போன்று இந்தச் சட்டத்திலும் மாற்றம் தேவை. இதை இலங்கை முஸ்லிம் சமூகத்தின் எந்த புத்திஜீவிகள் தரப்பும் மறுக்கவில்லை. எனினும் அதற்கான சரியான பொறி முறையை இனங்கண்டு கொள்ள வேண்டிய தேவை இலங்கை முஸ்லிம் சமூகத்தில் காணப்படுகின்றது.

குறித்த சட்டத்தில் மாற்றம் வேண்டும் என்பதை வலியுறுத்தும் உள்ளக வெளியக தரப்பினரை எதிர்ப்பதில் கவனத்தை குவிப்பதற்குப் பதிலாக இலங்கை முஸ் லிம் சமூகம் குறித்த சட்டத்தில் ஏற்படவேண்டிய மாற்றம் தொடர் பில் கவனத்தை குவிப்பதே காலத்தின் தேவையாகும்.

முன்பு போலன்றி சட்டத்துறையில் தேர்ச்சி பெற்ற முஸ்லிம் சட்ட அறிஞர்களும் நீதிபதிகளும் ஓய்வு பெற்ற நீதிபதிகளும் கடந்த 50 வருடங்களுடன் ஒப்பிடுகையில் இன்று அதிகம் உள்ளனர். இவ்வாறான சட்ட விவகாரங்கள் தொடர்பில் ஆர்வமுள்ள ஒவ்வொரு அமைப்பும் இவ்வாறான துறைசார் நிபுணர்களைத் தம் சார்பில் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு குழுவினூடாக இதில் அவசியமான மாற்றங்களை முறையான ஒழுங் கில் முன்னெடுக்கும் ஒரு



பொறி முறைக்கு வருவது இச்சட்டச் சீர்திருத்தத்தை மிக அழகாக எடுத்துச் செல்வதற்கான ஒரு முறையாக அமையும்.

மாற்றமாக அநாவசிய இன முரண்பாடுகளுக்கு வித்திடும் வழிமுறைகளைக் கையாள்வதால் சமூகம் மேலும் பின்னடையும் என்பதே எமது அச்சமாக உள்ளது.

எனவே புத்திஜீவிகள் இந்த விவகாரத்தை சாதகமான முறையில் கையாள்வதற்கான நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.- என்று தெரிவித்தார். (ஐ-130)

## சூழலைப் பாதுகாப்பது குறித்த பொதுக்கூட்டம்


யாழ்ப்பாணம், நவ.10

சர்வதேச புரட்சிகர கட்சிகள் மற்றும் அமைப்புக்களின் கூட்டமைப்பு பிரகடனப்படுத்தியுள்ள இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதற்கான சர்வதேச போராட்ட தினமான இன்று பொதுக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

புதிய ஜனநாயக மாக்சிஸ லெனினிஸக் கட்சியின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல. 62, காங்கேசன்துறை வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வானது புதிய ஜனநாயகமாக்சிஸலெனினிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஐ-9)





கொள்கை திட்டமிடல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் கீழ் இயங்கிவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நாடளாவிய ரீதியில் இளைஞர்களுக்கான தலைமைத்துவ பயிற்சியை நடத்தி வருகிறது. அந்த வகையில் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற் குட்பட்ட 100 இளைஞர்களுக்கான வதிவிட தலைமைத்துவ பயிற்சி பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தில் மாந்தை கிழக்கு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி அ.ஜெயாளன் தலைமையில் இடம்பெற்று நிறைவுகண்டுள்ளது.

(இ-81)

# கைபேசியால் சீரழியும் எம் சமூகம்



சக்தி

வந்ததே வந்தது கைத் தொலைபேசி. அனைவரது கைகளிலும் கைபேசி. சின்னஞ் சிறுவர்கள் கைகளிலும் தொலைபேசி. பொது மக்கள் பயணிக்கும் ரயில்கள், பஸ்கள், மினி பஸ்களில் ஏறிய கையோடு இளைஞர்கள், யுவதிகள் அவசர அவசரமாகக் கையிலெடுப்பது கைபேசியைத்தான்.

இலங்கை முழுவதிலும் இந்தப் பழக்கம் இருந்தாலும்கூட, வடக்கில் - அதுவும் யாழ்.குடாநாட்டில் இந்த மோகம் அதிகம் - மிக அதிகம் - என்றே சொல்ல வேண்டும். இவர்களில் அநேகமானோர் கையில் தொலைபேசிகளை இலாவகமாகப் பிடித்தவாறு செல்வது - வாகனங்களில் பயணிப்பது நாகரிகம் என்றோ -'ஸ்ரைல்'- என்றோ நினைக்கின்றார்கள் போலும்.

கைபேசிப் பாவனையால் ஏராளமான நன்மைகள், பிரயோசனங்கள் இருக்கின்றன. அவசரமான தகவலை எங்கிருந்தாலும் - எங்கு வைத்தும் கூறிவிடலாம்; அனுப்பிவிடலாம்.

அரசியல்வாதிகள், அதிகாரிகள், வர்த்தகர்கள் மட்டுமன்றி அனைவருக்குமே மிகவும் அவசியமான ஒன்றாகத் தொலைபேசி - குறிப்பாகக் கைபேசிகள் இன்று விளங்குகின்றன. அதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

ஆனால், கைபேசிகளைப் பாவிக்கும் முறையில்தான் பல்வேறு குளறுபடிகள். தீமைகள் இருக்கின்றன. சமூகவிரோதிகள் அவற்றைக் கொண்டு எத்தனையோ துஷ்பிரயோகங்களைச் செய்கின்றார்கள்; குடும்பங்களைச் சீரழிக்கின்றார்கள்; பெண்களை அவமானப்படுத்தி - சிறுமைப்படுத்தி மகிழ்கிறார்கள்.

ஆபாசமான காட்சிகளை - ஒளிப்படங்களை கைபேசிகளில் சேமித்து வைத்து - அவற்றைக் காண்பித்து பெண்களை --சிறுவர், சிறுமிகளை தவறான வழிக்குப் பலவந்தமாக இழுத்துச் சென்று, அவர்களைச் சீரழிக்கின்றார்கள் விசமிகள். சதிகாரர்கள், கொள்ளையர்கள் மற்றும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டவும் இந்தக் கைபேசிகள் முக்கிய தொடர்பு சாதனமாக உள்ளன. அவர்களின் சட்ட விரோத - அழிவுச் செயல்களுக்கு கருவியாகச் செயற்படுகின்றன.

மக்கள் கூடும் பொது இடங்கள், பொது மக்கள் பயணிக்கும் வாகனங்களில் சிலர் கைபேசிகளை அழுத்தித் தங்களின் குடும்ப விவகாரங்களை - இரகசியங்களைப் பகிரங்கப்படுத்தி விடுகின்றார்கள். வெளியில் தெரியக் கூடாத சில சமாச்சாரங்களையும் கூட உணர்ச்சி வசப்பட்டுக் கூறிவிடுகிறார்கள்.

பணக் கொடுக்கல் - வாங்கல்கள், கணவன் - மனைவியின் பிரச்சினைகள், வங்கிக்குப் பணம் எடுக்கப்போவது, அடைவு நகைகளை மீட்கப் போவது என்று எல்லா விடயங்களையும் தங்களை மறந்து உரையாடுகிறார்கள்.

இதனால் ஏற்படும் பாதகங்கள், இழப்புக்கள் குறித்து அவர்கள் சிந்திப்பதில்லை. இவை எல்லாவற்றுக்கும் மேலாக தங்களின் பணம் கரைந்து போவதை எவரும் கவனத்தில் எடுப்பதில்லை. போதை வஸ்துகளுக்கு அடிமையாகி இருப்பவன் போன்று எம்மவர்களும் இன்று கைபே சிக்கு அடிமையாகி விட்டனர். கைபேசி இல்லாவிட்டால் வாழ்க்கை இல்லை - வாழ முடியாது என்ற நிலைக்கு அவர் களின் மன நிலை மாறியுள்ளது.

இலங்கைத் தீவில் சேமிப்பில் முதன்மையானவர்கள் தமிழர்கள் - வடபகுதி மக்கள் - என்ற மகோன்னத நிலை தலைகீழாகிவிட்டது. தமிழர்கள் சேமிப்பில் வல்லவர்கள் - சிறந்தவர்கள் என்று தென்பகுதி மக்கள் பல வருடங்களுக்கு முன்னர் அடிக்கடி கூறும் - அந்தச் செய்தி - இப்போது நினைவுக்கு வருகிறது.

அவ்வாறான நிலை இன்றில்லை. எல்லாமே தலைகீழாகிவிட்டது. நாளாந்தம் இரவு - பகல் என்று பாராமல் கைபேசியைப் பாவித்துப் பணத்தை வீணடிக்கிறார்கள்; விரயமாக்குகிறார்கள்.

வடக்கு 'பெருங்குடி' மக்கள் சாராயம், பியர் குடிப்பதில் 'சாதனை' படைத்து வருகின்றார்கள். இலங்கையில் திறைசேரிக்குப் பெரும் வருமானத்தைத் தேடித்தருவது மது வகைதான். இந்த வருமானத்தை அள்ளிக் கொடுப்பதில் முதன்மை பெற்றுள்ளோம் வடக்கின் மறத் தமிழர்களாகிய நாம்.

அன்று தமிழர் தேசத்துக்காகப் போராடினோம். இன்றும் மதுவைக் குடித்து அதில் சாதனை புரியப் போராடி , அதில் வெற்றியும் கண்டுள்ளோம். இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இதற்காக எம்மவர்களை மறைணிகமாகப் பாராட்டிவிட்டுச் சென்றுள்ளார். அதுவும் யாழ்.மண்ணில் - எங்கள் மண்ணில் - வைத்தே அண்மையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கவலையுடன் அந்தப் புகழ் மாலையைச் சூட்டிச் சென்றுள்ளார் மைத்திரி.

எம் மக்களின் ஊதாரித்தனத்துக்கு வேறு உதாரணங்கள் - காரணங்கள் தேவையில்லை. இந்த நிலைமை மாற வேண்டும். தமிழர்களின் சீரழிவுப் போக்கை - நிலை தடுமாறிப்போகும் பாதையை மாற்ற வேண்டும்.

இளைஞர்களே! யுவதிகளே! எம் இனிய தமிழ்பேசும் மக்களே! இனியென்றாலும் நிமிர்ந்து எழுந்து புதிய பாதையில் செல்வோம். சிறந்த சமூகத்தை உருவாக்குவோம்.

இனியும் வேண்டாம் ஊதாரித்தனம்.

## கவனித்துச் செயற்படுங்கள்

- வாகனம் செலுத்தும் போது கைபேசியில் உரையாடுவது தற்கொலைக்குச் சமம். தவிர்க்க முடியாத சூழலில் வாகனத்தை ஓரமாக நிறுத்திவிட்டுப் பின் பேசலாம்.
- கைபேசி தொலைந்து விட்டால், திருடப்பட்டுவிட்டால் உடனே உரியவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திச் 'சிம்' அட்டையைச் செயலிழக்கச் செய்துவிட வேண்டும். ஏனெனில், உங்கள் கைபேசி சட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்பட்டுவிடும். நிச்சயமாகப் பொலிஸுக்கும் தகவல் தெரிவிக்கவும். இந்த இடத்தில் தான் உங்கள் கைபேசி பாவித்தமைக்கான கொடுப்பனவுச் சிட்டை உங்களுக்குக் கைகொடுக்கும். உங்கள் IMEI நம்பர், மொபைல் அட்டைப்பெட்டி மேல் அச்சிடப்பட்டிருக்கும்.
- கண்ட இடத்திலும் கைபேசியை வைத்துவிட்டுப் போகாதீர்கள். விடுதிகள், ஹோட்டல்களில் சாப்பிடும் போது மேசை மேல் வைக்காதீர். ஆண்கள் சட்டைப் பையில் வைக்க வேண்டாம்.
- தயவு செய்து கைபேசிகளைக் குளியலறை மற்றும் மலசல கூடங்களுக்குச் செல்லும் போது எடுத்துச் செல்வதைத் தவிருங்கள். தண்ணீர் பயன்பாடு உள்ள இடங்களுக்குப் போகும் போது பாதுகாப்பான இடத்தில் வைத்துவிட்டுச் செல்லுங்கள்.
- சினிமா தியேட்டர், இரவு நேர பஸ், ரயில் பயணம், மருத்துவமனை போன்ற அமைதியான இடங்களில் கைபேசியைத் தயவுசெய்து உபயோகிக்காதீர்கள்.

# தேநீர் வேண்டாம்! குடியுங்கள் தண்ணீர்!!



இன்றைய நவீன யுகத்தில் அனைவரும் தூங்கி எழுந்தவுடன் தேநீர் அல்லது கோப்பியில் தான் விழிப்பார்கள். இதுபோன்ற பழக்கத்தை தவிர்த்து, காலைதூங்கி எழுந்ததும் காலை தண்ணீர் குடிக்கும் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்ளுங் கள். இது உட லில் நிகழ்த்தும் ஆரோக்கிய அற் புதங்களை அறிந்தால், நீங்கள் இந்த பழக்கத்தை ஒரு போதும் கைவிடமாட்டீர்கள்

புதிய ஆய்வுகள் இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளன.

நீங்கள் எழுந்தவுடன் பருகுவதால் 300 மில்லி லீற்றர் தண்ணீர் உங்கள் சிறு நீரகங்கள் அற்புதமான அளவில் நச்சுக் களை வடிக்கட்ட ஆரம்பிக்கும். இரத்தத்தில் உள்ளநச்சுக்களை போக்கும். உடலில் தேவையின்றி தேங்கியிருக்கும் இரசாயனங்களை நீக்க இது உதவும். ஒட்டுமொத்த உடல் செயல்திறனை ஊக்குவிக்கும்.

காலையில் வெறும் வயிற்றில் நீர் குடிப்பதால் உங்கள் பசி குறையும். இதனால், உடல் பருமன் அதிகரிப்பதை குறைக்கமுடியும். கலோரிகள் குறைவாக எடுத்துக்கொள்வதால்உடலில் கொழுப்பு செல்கள் தேங்குவதை குறைக்க முடியும்.

நமது உடலில் படர்ந்து பெரிதாய் இடம் பெற்றிருக்கும் உடல் உறுப்பு சருமம் தான். இதை ஆரோக்கியமாக வைத்து கொள்ள நீங்கள் சீரான அளவில் தண்ணீர் குடிக்க வேண்டியது அவசியம். இதை சரியாக பின்பற்றுவதால் சருமத்தில் அதிக சுருக்கம், வறட்சி உண்டாகாமல் பார்த்துக் கொள்ளமுடியும்.

ஒருநாள் நீங்கள் சரியாக தண்ணீர் குடிக்கா மல் இருந்தாலும், குடல் இயக்க செயற் பாட்டில் தாக்கங்கள் உண்டாகும். இதனால் மலம் கழிப்பதில் பிரச்சினைகள் உண்டாகும். காலை எழுந்ததும் தண்ணீர் குடிப்பதால் மலம் கழிப்பதில் பிரச்சினை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள முடியும் என்று அந்த ஆய்வுகள் மேலும் கூறுகின்றன.



# மனிதனைத் தேடும் மனிதன்

5

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்



*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*

*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

*''இந்த எழுத்துக்கள் யாரையாவது சிந்திக்கத் தூண்டும் என்ற நம்பிக்கை எனக்குண்டு'' - என்ற எதிர்பார்ப்புடன் அவர் வரைந்த இந்தக் கட்டுரைத் தொடரை நமது தற்போதைய சமூகத்தின் சிந்தனைக்காக இங்கு முன்வைக்கிறோம்.*

*அவர் எதிர்பார்த்தமை போல மனித மனம் பற்றிய இந்தத் தொடர், நமது வாசகர்களின் சிந்தனையைத் தூண்டும் என்றே நாமும் நம்புகிறோம்.*

*அவரது சிந்தனைத் தெளிவை நாமும் தரிசிப்போம். வாருங்கள்...!*

கார்ள் மாக்ஸின் சிந்தனை உலகை இரு கூறுகளாக வகுத்துக் காட்ட முனைகிறார் அல்தூசர். ஒன்று இளம் பிராய தத்துவார்த்த எழுத்துக்கள், மற்றையது முதிர்ந்த மாக்ஸின் 'மூலதனம்'. இளம் பிராய எழுத்துக்கள் தத்துவக் கருத்து நிலை சார்ந்தவை என்பதும், 'மூலதனம்' அறிவியற் கோட்பாடுகளைக் கொண்ட வரலாற்று விஞ்ஞானமாக அமையப் பெற்றிருக்கிறது என்பதும் அவரது கருத்து. இளம்பிராய தத்துவ எழுத்துக்களில் மனிதத்துவம் பற்றி (Humanism) மாக்ஸ் கூறியவை எல்லாம் கருத்து நிலைசார்ந்த சித்தாந்த வாதம் என ஒதுக்கி விடும் அவர், மூலதனத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்.

மாக்ஸின் சிந்தனை உலகை, சித்தாந்தம் என்றும் விஞ்ஞானம் என்றும் இரு வகைப்படுத்தி மனிதத்துவத்துக்கு சாவு மணி அடிக்கும் அல்தூசரின் வாதத்தை நிராகரிப்பவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். மாக்ஸின் எழுத்துக்களில் ஒரு தொடர்ச்சியான படிநிலை வளர்ச்சி இருக்கிறது என்பதும், முதிர்ந்த வயதில் நிகழ்ந்த சிந்தனை முறிவு (Epistemological Break) என்ற அல்தூசரின் கருத்து தவறானது என்பதும் இவர்களது நிலைப்பாடு. மாக்ஸின் தத்துவார்த்த எழுத்துக்கள் முற்றுமுழுதாக மனிதத்துவம் பற்றியே குறிப்பிடுகின்றன என்பதும், 'மூலதனத்திலும்' முதலாளித்துவத்துக்கு எதிரான தார்மீகப் பிரகடனங்கள் நிறையவுண்டு என்பதும் இவர்களது வாதம். சர்ச்சைக்குரிய இந்த வாதப் பிரதிவாதங்களை இங்கு விவரித்துக் கூறுவது அவசியமில்லை.

கார்ள் மாக்ஸ் ஒரு மனிதாபிமானி. மானிடத்தின் விடுதலையை விரும்பியவர். முழு மனிதனைக் கனவு கண்டவர். மனித உலகத்தை மாற்றி அமைக்க விரும்பியவர். மனித செயற்பாடு மூலம் அது சாத்தியமாகும் என நம்பியவர். அவரது தார்மீக இலட்சியம் நெருப்பு வரிகளாக அவரது எல்லா எழுத்துக்களிலும் சுடர் விடுகிறது.

மனிதன் யார்? என்ற விசாரணையை அவர் நடத்தவில்லை. அது, அவரது ஆய்வுப் பொருளும் (Analytical object) அல்ல. ஆனால், மனிதம் பற்றியும், மனிதத்துவம் பற்றியும் மனித வளர்ச்சி பற்றியும் அவர் அக்கறையோடு எழுதியிருக்கிறார்.

மனிதாசாரம் (Humanessence) என்ற பதம் அவரது தத்துவார்த்த சிந்தனையின் மையமாக அமைகிறது. மனித ஆக்க சக்தியை, சிருஷ்டி சக்தியை, அந்தச் சொல் குறித்து நிற்கிறது. சாராம்சத்தில், மனிதனை ஒரு சிருஷ்டி கர்த்தாவாக, ஒரு படைப்பாளியாக அவர் பார்த்தார். பொருளுலகத்தைப் படைப்பவனாகவும் வரலாற்றை சிருஷ்டிப்பவனாகவும் மனிதனை அவர் சித்திரித்தார். இந்த மனித சிருஷ்டி சக்தியையே தொழிலாக்க சக்தியாக (Labour power), பொருட்படைப்பின் மூல சக்தியாக 'மூலதனத்தில்' வர்ணிக்கிறார். இந்தத் தொழிலாக்கசக்தி மனிதனிடம் இருந்து அந்நியமா தலையே மனிதச் சிதைவு எனக் குறிப்பிடுகிறார்.

முதலாளியம் மனித தொழிலாக்க சக்தியால் கட்டியெழுப்பப்படுகிறது. மனிதன் கட்டிய அக்கோட்டைக்குள் மனிதனே சிறைப்படுகிறான். படைப்பாளியை படைப்பே விழுங்கிக்கொள்கிறது. முதலாளியத்தின் அநீதியான சமூக உறவுகளால் விலங்கிடப்பட்டிருக்கும் மனிதனையே கார்ள் மாக்ஸ் கண்டார். எனவே 'மூலதனத்தில்' சித்திரிக்கப்படும் மனிதன் முழு மனிதன் அல்லன். அவன் தன்னை இழந்த, தனது சுயத்தை இழந்த, தனது சுதந்திரத்தை இழந்த மனிதன். பொருண்மிய குறியீடாக, பொருண்மிய சக்திகளால் ஆட்டிப்படைக்கப்படும் ஒரு பொம்மை மனிதன்.

பொருளிய வாழ்விற்கும் பொருண்மிய உறவுகளுக்குமே கார்ள் மாக்ஸ் முக்கியத்துவம் கொடுத்தார். மனித இனம், வாழ்க்கையை நிர்ணயிப்பதல்ல. பொருளிய வாழ்வே மனித மனதை நிர்ணயித்துவிடுகிறது என்று அவர் எழுதினார். சமூக உறவுகள் என்பது, அவரது ஆய்வில் உற்பத்தி உறவுகளால் உருவாகும் வர்க்க உறவுகளையே குறிக்கிறது. இந்த வர்க்க உறவுகளைத் தாங்கி நிற்கும் வர்க்க மனிதனையே அவர் சமூக மனிதனாகக் கண்டார். எனவே, மாக்ஸின் சமூக மனிதன் பொருளாதாரக் கட்டுமானத்தின் வரம்பிற்குள் முடங்கிக் கிடக்கிறான்.

சமூக உறவுகள் என்பது சிலந்தி வலை போன்று சிக்கலானது. பல்முகப் பரிமாணங்களைக் கொண்டது. சமூக உறவுகள் அனைத்தையும் பொருளாதார உறவு என்ற வட்டத்திற்குள் வரையறுத்துவிட முடியாது.



சமூக உறவுகள் என்ற முடிச்சுகள் பல. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையானவை. தாய் பிள்ளை உறவு, சகோதர உறவு, தாம்பத்திய உறவு, குடும்ப உறவு, நட்புறவு, காதல் உறவு, கல்வி உறவு, கட்சி உறவு, சமய உறவு, சாதி உறவு, கலை உறவு, பண்பாட்டு உறவு என்பவையும், இன்னும் எண்ணில்லாதவையுமாக சமூக உறவுகளால் மனிதர்கள் பிணைந்து கிடக்கிறார்கள். இந்தச் சமூக உறவுகளும், அவை விளைவிக்கும் தாக்கங்களும் மனித சுயத்தின் தோற்றத்துக்கும், வளர்ச்சிக்கும் ஏதுவாகின்றன. மனித உருவாக்கத்துக்கு அடிப்படையாக அமைகின்றன.

வர்க்க உறவுகளை மட்டும் பிரதிபலிக்கும் வெறும் பொருண்மிய மனிதனை முழுமையான சமூக மனிதனாகக் கொள்ள முடியாது.

மனிதன் வெறும் உழைக்கும் இயந்திரம் அல்லன். மனிதனின் சாரத்தை வெறும் உழைப்பு சக்தியாக, படைப்பாற்றல் சக்தியாக மட்டும் சித்திரித்து விட முடியாது. மனிதனிடம் உள்ளமுண்டு; உணர்வுகள் உண்டு; சமூக கலாசார வாழ்வில் பெறப்பட்ட பண்புகள் உண்டு. இவை எல்லாம் ஒன்று திரண்ட மனிதம் உண்டு, சுயமுண்டு, ஆளுமை உண்டு, ஆழ்மனமுண்டு.

மாக்ஸிய தத்துவம் தனிமனிதனை ஒதுக்கி விட்டதால் முழுமனிதனை தரிசித்து நிற்கவில்லை.

சமூக அறிவியலுக்கு மனிதத்துவம் பற்றிய விசாரணைகள் அவசியம் இல்லை என்பது சில மாக்ஸிய தத்துவாசிரியர்களின் கருத்து. மாக்ஸியம் சமூகவியலாக மட்டுமன்றி மனிதவியலாக முழுமை பெறுவதற்கு மனிதன் பற்றிய ஆழமான பார்வை தேவை என்பது வேறு சிலரது வாதம். மாக்ஸியத்தில் தனி மனிதனின் மனிதத்துவமும் உதாசீனம் செய்யப்பட்டதால்தான், மாக்ஸிய சித்தாந்தத்தை தழுவிக்கொண்ட சோசலிச அரசுகள் சர்வாதிகாரத்தை நிலை நிறுவி, தனி மனித சுதந்திரங்களை நசுக்க முயன்றன என்பதும் இவர்களது நிலைப்பாடு.

மாக்ஸியத்தில் உள்ள இந்தக் குறைபாட்டை எப்படி நீக்குவது? மனிதனுக்கு முழுமையான விளக்கம் எவ்விதம் அளிப்பது?

மாக்ஸிய சமூகவியல் கோட்பாடுகளையும் பிராய்டின் மனப் பகுப்பியல் கோட்பாடுகளையும் ஒன்றிணைத்துப் புதிதாக ஓர் அறிவியல் தத்துவத்தை உருவாக்கினால் மனிதன் பற்றி விஞ்ஞான பூர்வமான ஓர் ஆழமான தரிசனம் கிட்டலாம் என்பதும் சில அறிஞர்களது கருத்து. மாக்ஸிய சமூகவியலையும் பிராய்டின் உளவியலையும் கோட்பாட்டு ரீதியாக திருமணம் செய்து வைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை. இரண்டு, வெவ்வேறான ஆய்வு இலக்குகளைக் கொண்ட அறிவியல் உலகங்களை ஒன்றிணைப்பது சுலபமான காரியமல்ல. நவ பிராய்டிய சிந்தனையாளர்களான லக்கான் (Lacan) போன்றவர்கள் உளப் பகுப்பியலை மொழியமைப்பியலாக (Linguistic sturcturalism) உருமாற்றம் செய்ய முனைவதால் இந்த இணைப்பு முயற்சிகள் மேலும் சிக்கலடைந்துள்ளன. ஆயினும், மனிதனைத் தேடும் மனிதனின் முயற்சி தொடர்கின்றது.

இந்த உலகம் மாறி வருகின்றது. மாறி வரும் இந்த உலகத்துடன் மனிதனும் மாறி வருகின்றான். காலம் என்ற காற்று அடித்துச்செல்லும் மாற்றம் என்ற படகில், ஒரு முடிவில்லாப் பயணத்தைத் தொடரும் மனிதன், தன்னை நோக்கிப் பார்க்கின்றான். அந்த சுயதரிசனத்தில் அவனது முகம் அவனுக்குப் புலப்படுவதில்லை. அது சதா மாறிக்கொண்டிருக்கின்றது. இறந்த காலத்தின் சுவடுகளும், எதிர்காலத்தின் நம்பிக்கைகளுமே அவனுக்குத் தென்படுகின்றன.

ஆனால், மனிதன் தன்னைத் தேடுகிறான். முடிவில்லாத் தொடர்கதையாக அந்தத் தேடுதல் தொடர்கிறது.

# இலங்கை முழுவதும் தற்போது 17 இலட்சம் மாற்றுத் திறனாளிகள்

## மேல் மாகாண மேலதிக தேர்தல் ஆணையாளர் கூறுகிறார்



கொழும்பு, நவ.10

இலங்கையில் 17 இலட்சம் பேர் மாற்றுத் திறனாளிகளாக உள்ளனர். அவர்களில் 15 இலட்சம் பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று மேல் மாகாண மேலதிக தேர்தல் ஆணையாளர் சமன் சிறி ரத்னாயக்க தெரிவித்தார்.

'ஆளுகை விவகாரங்கள் மற்றும் செயற்பாடுகளில் மாற்றுத் திறனாளிகளின் செயற்பாடுகளுடனான குடியுரிமை மற்றும் பங்கேற்பை மேம்படுத்தல்' என்ற தலைப்பிலான செயலமர்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடகிழக்கு மாகாணத்தில் மாற்றுத் திறனாளிகள் தொடர்பில் தேர்தல் காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தேர்தல்கள் திணைக்களம் அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றது.

அதற்கு அமைவாக மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் விடுதியில் இலங்கை தேர்தல் திணைக்களம், கமீட் அமைப்பு என்பன இணைந்து யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த நிகழ்வை நடத்தியது.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு;

"மாற்றுத் திறனாளிகள் மீது நாம் அதிகம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம். உலக சுகாதார நிறுவனத்தின் தகவலின்படி உலக சனத்தொகையில் சுமார் ஒரு பில்லியன் பேர் மாற்றுத் திறனாளிகளாக உள்ளனர்.

அது உலக சனத்தொகையில் 15 வீதமாகக் கணிக்கப்படுகின்றது.

தேர்தல் காலங்களில் மாற்றுத் திறனாளிகள் குறித்து அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

மாற்றுத் திறனாளிகளில் 20 வீதமானோர் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வாழ்கின்றனர். 80 வீதமானோர் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வாழ்கின்றனர்.

இலங்கையில் 2015 ஜூலை மாத சனத்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் இரண்டு கோடியே 20 இலட்சத்து 53 ஆயிரத்து 488 பேர் வசிக்கின்றனர்.

அவர்களில் 17 இலட்சம் பேர் மாற்றுத் திறனாளிகளாக உள்ளனர். இவர்களில் 60 வயதைத் தாண்டியவர்களாக 15 இலட்சம் பேர் உள்ளனர்.பிரதேச செயலகங்களில் மாற்றுத் திறனாளிகள் வந்து செல்லும் வகையில் தகுந்த வழிகள் அமைக்கப்பட வேண்டும். அதனை இங்குள்ள பிரதேச செயலாளர்கள், சபை செயலாளர்கள் மேற்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார். (ஏ)

### இலங்கை ஏற்றுமதியில் உலக வங்கி அதிருப்தி

கொழும்பு, நவ.10

இலங்கையின் ஏற்றுமதி தொடர்பில் திருப்தி அடைய முடியாது என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

தெற்காசிய வலய நாடுகளுடன் ஒப்பீடு செய்யும்போது இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்தி வீதம் மிகவும் குறைந்தளவில் காணப்படுகின்றது.

2000-2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகம் 5 வீதத்தை விடவும் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

ஏற்றுமதியை அபிவிருத்தி செய்துகொள்ள இலங்கை சாதகமான காரணிகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பூகோள அமைவிடம், வர்த்தக உறவுகள், கல்வித்தகைமை, அபிவிருத்தி அடைந்து வரும் நகரங்களின் சாதகத்தன்மை என்பனவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, ஏற்றுமதி வர்த்தகத்தை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கில் ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீளப் பெற்றுக் கொள்ள அரசு முயன்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

## தினசரி ராசி பலன் 10.11.2016

| | | |
|---|---|---|
| சுபநேரம் | : காலை : 10.45 - 11.45 | |
| | மாலை : 12.15 - 1.15 | |
| ராகு காலம் | : 1.30 - 3.00 | ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார் |
| குளிகன் | : 9.00 - 10.30 | ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம் கும்பகோணம், தமிழ்நாடு. |
| எமகண்டம் | : 6.00 - 7.30 | (maruthi_jaya2003@yahoo.co.in) |

சுபமுகூர்த்த நாள் - மேல்நோக்கு நாள்

**மேஷம்** : நற்செயல் - எண்ணங்களும் , செயல்களும் வெற்றியையே தரும் நன்னாள்.

**ரிஷபம்** : நலம் - இன்று மன மற்றும் உடல் ஆரோக்கியத்தில் நலம் காண்பீர்கள்.

**மிதுனம்** : தேர்ச்சி - பல விஷயங்களில் அனுபவம் கிடைக்கும் நன்னாள்.

**கடகம்** : அமைதி - மனக் குழப்பங்கள் குறைந்து நிம்மதி ஏற்பட்டு அமைதி காண்பீர்கள்.

**சிம்மம்** : புகழ் - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் எடுக்கும் அனைத்துக் காரியத்திலும் நிதானத்துடன் இருந்தால் புகழ் சேரும். சந்திராஷ்டமம்: மகம், பூரம்

**கன்னி** : பாசம் - அன்பானவர்களின் ஆதரவு கிடைக்கும் நன்னாள்.

**துலாம்**: சுபம் - எண்ணங்கள் யாவும் நல்லவைகளாக ஈடேறும்.

**விருச்சிகம்**: போட்டி - குடும்பத்தினருடனும் , தொழில் முறையிலும் போட்டிகள் நிலவும்.


**தனுசு**: தனம் - அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் நல்கும்.

**மகரம்**: சாந்தம் - மனதில் உள்ள குழப்பங்கள் குறைந்து அமைதி ஏற்படும்.

**கும்பம்**: சுகம் - இன்று மனதில் மகிழ்ச்சி நிறையும் நன்னாள்.

**மீனம்**: சிக்கல் - மனதின் எண்ணங்கள் தடுமாறும். எனவே செயல்களில் சிறப்புகள் குறைவடையும்.

## தேசிய பூங்காவில் சிக்கியது வெள்ளை நிற அரிய மயில்



கொழும்பு, நவ.10

வெள்ளை நிற அரியவகை மயில் ஒன்று இலங்கையில் சிக்கியுள்ளது.

மயில்கள் பொதுவாக கறுப்பு மற்றும் பழுப்பு நிறத்திலேயே காணப்படும். எனினும் இலங்கை தேசிய பூங்காவில் வெள்ளை நிறத்திலான பெண் மயில் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் கமராவில் இந்த அரியவகை மயில் சிக்கியுள்ளது.

இலங்கை சுற்றுச்சூழலில் இவ்வாறான வெள்ளை மயில் இதற்கு முன்னர், புத்தல பகுதியில் பல வருடங்களுக்கு முன்னர் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஏ)

### இலங்கை கடற்படை மீண்டும் அத்துமீறல்

கச்சதீவுக்கு அருகில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த தமிழக மீனவர்களின் மீன்பிடி வலைகளை இலங்கையின் கடற்படையினர் நாசப்படுத்தினர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

641 படகுகளில் சுமார் 3000 மீனவர்கள் நேற்றுமுன்தினம் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது சுமார் 30 படகுகளை சுற்றி வளைத்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களின் வலைகளை அறுத்து எறிந்துள்ளனர் என்று தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து மீனவர்கள் தொழிலில் ஈடுபடாமல் கரைக்குத் திரும்பினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் இலங்கை-இந்திய ராஜதந்திர பேச்சு நடைபெற்றுள்ள நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

## சட்டவிரோத சிறுநீரக வர்த்தகம்; தப்பினர் 7 சந்தேக நபர்களும்!

கொழும்பு, நவ.10

சட்டவிரோத சிறுநீரக வர்த்தகத்தில் ஈடுபட்டனர் என்று குற்றம் சுமத்தப்பட்ட இந்தியர்கள் தடுப்பு முகாமிலிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

திட்டமிட்ட அடிப்படையில் அந்த இந்தியர்கள் ஏழு பேரும் மிரிஹான தடுப்பு முகாமிலிருந்து நேற்று முன்தினம் தப்பிச் சென்றுள்ளனர்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இந்தியர்களைக் காணவில்லை என்று கொழும்பு மகசீன் சிறைச்சாலையின், சிறைச்சாலை அதிகாரி கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலபிட்டியவிடம் அறிவித்துள்ளார்.

இதேவேளை, சந்தேகநபர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்குமாறு ஏற்கனவே நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்தநிலையில் திட்டமிட்ட வகையில் அவர்கள் எவ்வாறு தப்பிச் சென்றார்கள் என்பது குறித்து விளக்கமளிக்குமாறு மிரிஹான பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி இது தொடர்பில் விளக்கம் அறிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான அழைப்பாணை உத்தரவு ஒன்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு நீதிமன்றம் அனுப்பியுள்ளது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சிறு நீரக வர்த்தக நடவடிக்கைகளில் தொடர்புடைய குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் மிரிஹான தடுப்பு முகாமிலிருந்து தப்பித்து ஏற்கனவே வெளிநாடு சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஏ)

# அங்கவீனமான இராணுவம் மீதான தாக்குதல் இலங்கை வரலாற்றிலேயே கறுப்புப் புள்ளி!

## தாய்நாட்டுக்கான இராணுவ சங்கம் கவலை தெரிவிப்பு

கொழும்பு, நவ.10

அங்கவீனமடைந்த இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் இலங்கை வரலாற்றின் கறுப்புப் புள்ளி. இது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியது.

இவ்வாறு தாய் நாட்டுக்கான இராணுவ சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த அமைப்பினர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக தாய் நாட்டுக்கான இராணுவ சங்கத்தின் தலைவரான ஓய்வு பெற்ற மேஜர் அஜித் பிரசன்ன மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஓய்வூதிய கொடுப்பனவு வேண்டி மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் கண்டிக்கப்படத்தக்கது. இது தொடர்பில் நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பாதுகாப்பு செயலாளர் போன்றோர் மன்னிப்பு கேட்க வேண்டும்.

இதேவேளை, குறித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரை வேண்டும் என்றே சத்தம் எழுப்பி சீண்டியதோடு பகிரங்கமாகவும், முறைகேடான வகையிலும் பிக்குகளுடன் ஜனாதிபதி செயலகத்துக்குள் பிரவேசிக்க முயன்ற காரணத்தாலேயே பொலிஸார் கண்ணீர் புகை மட்டும் நீர்த்தாரை பிரயோகித்தனர்.

பொலிஸார் நீர்த்தாரை பிரயோகிப்பதை எதிர்பார்த்து வேண்டும் என்றே பிக்குகளும் வெளியாரும் ஜனாதிபதி செயலகத்துக்குள் செல்ல முயற்சித்தமை காணொலி ஆதாரத்துடன் நிரூபிக்கின்றது.

எனினும் குறித்த ஆதாரங்கள் மறைக்கப்பட்டு இராணுவத்தினர் மீது முறைகேடான வகையில் வேண்டும் என்றே தாக்குதல் நடத்தப்பட்டது என்று கூறி அரசுக்கு எதிரான கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

இதன் மூலம் இராணுவத்தினரும் மக்களும் ஆட்சிக்கு எதிராகத் திசை திருப்பப்படுகின்றனர். இனவாதக் கருத்துகளும் தென்னிலங்கையில் வெளியிடப்பட்டு வருகின்றன. அத்துடன் சிங்கள மக்கள் அனைவரும் ஒன்று திரள வேண்டும் எனவும் பிக்குகள் தரப்பும் ஆட்சிக்கு எதிரான சக்திகளும் கோரிக்கைகள் விடுத்துள்ளன. - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## சாரதிகளுக்கு 31,500 ரூபா அபராதம்!

போக்குவரத்து விதிமுறையை மீறி வாகனம் செலுத்திய சாரதிகள் நால்வருக்கு 31 ஆயிரத்து 500 ரூபா அப்ராதம் விதித்து மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன் கடந்த செவ் வாய்க்கிழமை தீர்ப்பளித்தார்

அத்துடன் சாரதிகள் மூவரையும் சமுதாயச் சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்துமாறு மாவட்ட சமுதாயச் சீர்திருத்த அதிகாரிக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி டிமோ வானத்தைச் செலுத்திச் சென்ற கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த சாரதிக்கு 9 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான் 150 மணித்தியாலங்கள் சமுதாய சீர்த்திருத்த கட்டளைக்கு உட்படுத்த உத்தரவிட்டார்.

காப்புறுதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய ஓட்டுநருக்கு 5 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் வருமானவரிப் பத்திரம்இன்றி ஆபத்தான முறையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய சாரதிக்கு 8 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதித்த நீதிவான் 30 மணித்தியாலம் சமுதாயச் சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்த உத்தரவிட்டார். மது போதையில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி முச்சக்கரவண்டி செலுத்திய சாரதிக்கு 9 ஆயிரம் ரூபா அபராதமும் 30 மணித்தியால சமுதாயத் சீர்திருத்தமும் விதிக்கப்பட்டது. (இ-9)

## அமைச்சர் டெனிஸ்வரனால் ஆலயங்களுக்கு நிதியுதவி



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் 2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து, மன்னார் மாவட்டத்தின் மாவிலங்கேணி புனித அடைக்கலமாதா ஆலயம் மற்றும் முருங்கன் மெதடிஸ்த திருச்சபை ஆகியவற்றுக்கு புனரமைப்புப் பணிகளுக்காக தலா 50 ஆயிரம் ரூபா வீதம் ஒதுகப்பட்டது. ஆலய வேலைகள் நிறைவுற்றுள்ள நிலையில் அவற்றுக்கான காசோலைகளை கடந்த திங்கள் காலை மன்னாரில் உள்ள அமைச்சரது உப அலுவலகத்தில் வைத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் குறித்த ஆலயங்களின் பிரதிநிதிகளிடம் வழங்கினார். இ-18)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம். நவ. 10

யாழ்ப்பாணம் உயர் தொழிநுட்பவியல் நிறுவனத்திலிருந்து எதிர்வரும் 22ஆம் திகதி பட்டம் பெறும் மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பட்டம் பெறும் சகல மாணவர்களும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங் கத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (இ-7)

## திருட்டில் ஈடுபட்டோருக்கு 5 லட்சம் ரூபா பிணை

வீடு புகுந்து திருடியவர்கள் 5 இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சிறுப்பிட்டி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் உள்ள வீடு ஒன்றினுள் யாரும் இல்லாத நேரம்பார்த்து அத்துமீறி நுழைந்து இலத்திரனியல் பொருள்கள் திருடிய குற்றச்சாட்டில் கடந்த செம்ரெம்பர் மாதம் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்தச் சந்தேகநபர்கள் இருவரையும் 5இலட்சம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன் செவ்வாய்க்கிழமை அனுமதியளித்தார். வழக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

கோயிலுக்கு சென்றுவிட்டு திரும்பிய உரிமையாளர் வீட்டில் திருடிக் கொண்டிருந்த இருவரையும் மடக்கிப் பிடித்து அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். இவ்வாறு திருட்டில் ஈடுபட்டவர்களில் ஒருவர் கண்டி பசறை பகுதியைச் சோந்தவர். மற்றையவர் நாவற்குழி பகுதியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த செம்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி சிறுப்பிட்டி பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் நுழைந்து யாரும் இல்லாத நேரம் பார்த்து 45 அங்குல தொலைக்காட்சி, பாடல் ஒலிபரப்பும் கருவி, மைக்ரோவேவ் அவன், டிவீடி பிளேயர் இரண்டு, கைபேசி என்பவற்றை அவர்கள் திருடினர் என்று வீட்டு உரிமையாளரால் பொலிஸில் முறைப்பாடுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-9)

## பொருட்களைக் கொள்வனவு செய்துவிட்டு ஏமாற்றினார் என்று பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ.10

ஆவரங்கால் பகுதியில் உள்ள ஹாட்வெயர் கடை ஒன்றில் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கடனாகக் கொள்வனவு செய்துவிட்டு ஏமாற்றியுள்ளார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களாக ஏமாற்றி வந்த நபர் ஒருவருக்கு எதிராக கடை உரிமையாளர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்துள்ளார்.

வயாவிளான் பகுதியில் தற்போது மீள்குடியமர்ந்த ஒருவருக்கு எதிராகவே இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வீட்டுத் திட்டத்தை நிறைவு செய்வதற்காக அந்த நபர் அவசரமாக 2 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை ஆவரங்கால் பகுதியில் உள்ள ஹாட்வெயர் கடையில் கடனாகக் கொள்வனவு செய்திருந்தார்.

ஒரு வாரத்துக்குள் பணம் தருவதாக கூறி பொருள்கள் வாங்கிச் சென்றவர் இரண்டு மாதங்கள் கடந்தும் இன்னும் பணத்தை செலுத்தவில்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்ப ட்டுள்ளது. வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-9)

## நடேஸ்வராக் கல்லூரி வீதியை திறந்து விடுமாறு கோரிக்கை

காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரியின் - தையிட்டி நோக்கிய வீதியை மக்களின் பாவனைக்கு விடுவிக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபாலவினால் வலி வடக்கில் 454 ஏக்கர் நிலப் பகுதி விடுவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அப் பகுதிகளுக்கு செல்லக்கூடிய இலகுவான பாதை கல்லூரி வீதி ஆகும். ஆனால் அவ் வீதியை இராணுவத்தினர் தங்களின் பாவனைக்காக தொடர்புபடுத்தி ஆக்கிரமித்து வந்துள்ளனர். இதனால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். விடுவிக்கப்பட்ட பகுதிகளில் தமது காணிகளைக் கூட அடையாளம் காணமுடியாத நிலையும் காணப்படுகிறது.

எனவே மக்களின் இடர்பாடுகளைப் போக்கும் வகையில் கல்லூரி வீதியை விடுவிக்குமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-51)

## தடைப்பட்டது பழைய மாணவர் சங்க நிர்வாகத் தெரிவு

நடேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் 2017 ஆண்டுக்கான புதிய நிர்வாகத்தெரிவு நடைபெறவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

26 வருடங்களின் பின்னர் முதன் முறையாகச் சொந்த வளாகத்தில் மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் சங்க பொதுச் சபை அதிபர் தலைமையில் கூட்டப்பட்டிருந்தது. புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்து வினைத்திறனுடன் சங்கத்தை இயங்க வைக்கும் முகமாகவே சிலர் இந்த ஏற்பாடுகளை ஒழுங்கு செய்துள்ளனர். ஆனால் பழைய நிர்வாகத்தின் கணக்கு அறிக்கை கணக்காய்வாளர் ஒருவரினால் ஆராய்ந்து சமர்பிக்காததால் பொதுச்சபை, புதிய நிர்வாகத் தெரிவுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்துவிட்டது. இதனால் புதிய நிர்வாகத் தெரிவு டிசம்பர் மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (இ-51)

## வாசகர் கருத்து மேடை



### குப்பைகளை தனியார் நிறுவனங்கள் மூலம் கட்டண அடிப்படையில் அகற்றலாம்

தற்போது யாழ். மாநகர சபை நிர்வாகப் பிரிவில் சுகதாரத் தொழிலாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால் தெருவோரங்கள் தோறும் வீட்டுக் கழிவுகளும் இதர கழிவுகளும் சிதறித் தேங்கிக் காணப்படுகின்றன. இவை யாவற்றிற்கும் பொருளாதார நெருக்கடியே அடிப்படை பின்னணி காரணம்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் மக்கள் குறிப்பாக நகர மக்கள் தமது அன்றாட கழிவுகளை அகற்ற உள்ளூராட்சி மன்றங்களை மட்டும் நம்பி இருக்கும் சூழல் உள்ளது. அப்பணியும் இலவசமாகவே முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனால் திண்மக் கழிவு முகாமைத்துவத்தில் தேவையற்ற கழிவுகளை உருவாக்குவதால் கட்டுப்படுத்தவும், கழிவுகளின் அளவைக் கணக்கீடு செய்யவும் கழிவு அகற்றல் செயற்பாட்டிற்கு கட்டணம் அறவிடல் சிறந்தது.

இன்று யாழ்.நகரில் ஒரு பரப்புக்காணி சுமார் 50 இலட்சம் ரூபா அளவில் பணம் கொடுத்து வாங்கி போட்டி போட்டு வீடுகளை அமைக்கும் நிலைமை காணப்படுகின்றது. ஆகையால் வீட்டுக் கழிவுகளை தனிப்பட்ட வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் அகற்றும் பொறிமுறை இன்று மிகவும் பயனுள்ள வர்த்தகத் துறையாக மாறும். மேலும் இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கக் கூடியதாகவும் அமையும். அடுத்து தற்போது உருவாக்கியுள்ள தூய்மையற்ற சூழல் உருவாகாது பாதுகாக்க முடியும்.

அவ்வாறு திண்மக் கழிவு அகற்றும் பொறிமுறையை தனிப்பட்ட நிறுவனங்கள் மூலம் முன்னெடுக்கும் முறைமை ஏற்படுத்தப்படுமானால், இப்போது உருவாகியுள்ள தூய்மையற்ற சூழல் ஏற்படாமலும் பாதுகாத்துக்கொள்ள - பார்த்துக்கொள்ள முடியும்.

மருத்துவர்
யமுனாநந்தா

# பிரிட்டன் தொழிலதிபர்களின் முதலீடு கர்நாடகாவில் தேவை

## அந்த மாநில முதல்வர் தெரசா மே யிடம் கோரிக்கை

பெங்களூர், நவ.10

பிரிட்டன் தொழிலதிபர்கள் கர்நாடகாவில் அதிகளவில் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என்று அந்த மாநில முதலமைச்சர் சித்த ராமையா பிரிட்டன் பிரதமர் தெரசாமேயிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மூன்று தினங்கள் சுற்றுப் பயணமாக இந்தியா சென்றுள்ள பிரிட்டன் பிரதமர் நேற்றுமுன்தினம் பெங்களூர் சென்றிருந்த நிலையில் அவரை சந்தித்த போதே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்;

பிரிட்டனுக்கும் கர்நாடக மாநிலத்துக்கும் இடையே நீண்ட காலமாக நட்புறவு உள்ளது. இந்தச் சந்திப்பின் மூலம் பெங்களூர் மற்றும் பிரிட்டன் ஆகிய இரு தரப்பு தொழிலதிபர்களும் பலன் அடைவார்கள் என்று நம்புகிறேன்.

தகவல் தொழில்நுட்பம், கட்டுமானம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பிரிட்டனைப் போலவே பெங்களூரும் துரிதமாக வளர்ந்து வருகிறது என்று தெரிவித்த அவர் பிரிட்டனின் முதலீடுகளை வரவேற்கும் வகையில் பல்வேறு சலுகைகளை வழங்க கர்நாடக அரசு தயாராக இருக்கிறது.

அதேபோல இந்தியாவில் இருந்து பிரிட்டன் செல்லும் ஊழியர்களை வரவேற்கும் வகையில் புதிய விசா கொள்கையை வரையறுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

# மோடியின் துணிச்சலுக்கு பிரபலங்கள் வரவேற்பு

டில்லி, நவ.10

இந்தியா முழுவதும் 500, 1000 ரூபா தாள்கள் செல்லுபடியாகா என்ற பிரதமரின் துணிச்சலான அறிவிப்பை பிரபலங்கள் பலரும் வரவேற்றுள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 500 ரூபா மற்றும் ஆயிரம் ரூபா தாள்கள் செல்லுபடியாகா என்று பிரதமர் மோடி அறிவித்திருந்தார்.

பிரதமரின் இந்த அதிரடி அறிவிப்பால் நாடு முழுவதும் மக்களிடையே அதிர்ச்சியும் குழப்பமும் ஏற்பட்டுள்ளது.

கத்தை கத்தையாக பல கோடி ரூபாத் தாள்களை வைத்துள்ள பெரும் பணக்காரர்கள் மட்டுமின்றி சாதாரண மக்கள் கூட நேற்றுக் காலையில் இருந்து 500, ஆயிரம் ரூபா தாள்களை மாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கறுப்புப்பணத்தை ஒழிப்பதற்காகவும், கள்ள நோட்டுக்கள் புழக்கத்தை தடுப்பதற்காகவும் மோடி எடுத்த இந்த அதிரடி முடிவை அரசியல் தலைவர்கள் பலரும் பாராட்டி வருகின்றனர்.

இந்தநிலையில் சினிமா பிரபலங்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன், ரித்தேஷ் தேஷ்முக், கரண் ஜோகர், நாகார்ஜுனா, அஜய் தேவ்கன் மற்றும் கிரிக்கெட் நட்சத்திரங்கள் அனில் கும்ப்ளே, ஹர்பஜன் சிங் ஆகியோர் பிரதமர் மோடியின் டுவிட்டர் பக்கத்துக்குச் சென்று தங்களது பாராட்டுகளைத் தெரிவித்து வருகின்றனர்.

'புதிய இந்தியா பிறந்துள்ளது' என்று நடிகர் ரஜினிகாந்தும், சிறந்த பொருளாதாரத்தை நோக்கி இந்தியா சென்று கொண்டிருக்கிறது என்று நடிகர் நாகார்ஜுனாவும் தெரிவித்துள்ளனர்.

பிரபலங்கள் அனைவரின் வாழ்த்தையும் ஏற்றுக்கொண்ட பிரதமர் மோடி, நாட்டிலிருந்து ஊழலை முற்றிலும் ஒழிக்கவே இந்த முடிவை தான் எடுத்ததாக தெரிவித்தார். (எ)



ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறிய பின்னர் வர்த்தக ஒப்பந்தம் குறித்து பேச்சு நடத்துவதற்காக இந்தியா வந்துள்ள பிரிட்டன் பிரதமர் தெரசா மே பெங்களூரில் உள்ள ஸ்ரீ சோமேஷ்வர கோயிலுக்கு தமிழர் பாரம்பரிய முறைப்படி பட்டுச்சேலை அணிந்து சென்று தரிசனம் செய்துள்ளார். (எ)

# மோடியின் நடவடிக்கைக்கு ஜனாதிபதி பிரணாப் வரவேற்பு

டில்லி, நவ.10

பிரதமர் நரேந்திர மோடி 500 மற்றும் ஆயிரம் ரூபா தாள்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் செல்லுபடியாகா என்று அதிரடியாக அறிவித்தார். பிரதமரின் இந்த அதிரடி நடவடிக்கையை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வரவேற்றுள்ளார்.



இது குறித்து ஜனாதிபதி மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

'500 மற்றும் ஆயிரம் ரூபா தாள்கள் செல்லுபடியாகா என்று அறிவிப்பு தொடர்பாக பிரதமர் நேற்று முன்தினம் நேரில் சந்தித்து விரிவாக எடுத்துரைத்தார். பிரதமரின் இந்த தைரியமான நடவடிக்கையின் காரணமாக கணக்கில் வராத கறுப்புப் பணம் வெளியே வரும். இதனை வரவேற்கிறோம். ரூபா தாள்கள் செல்லுபடியாகா என்று அறிவித்துள்ளதால், பொதுமக்கள் யாரும் பீதி அடைய வேண்டாம். அரசு அறிவித்துள்ள வங்கிகளில் ரூபா தாள்களை மாற்றிக் கொள்ளலாம். மற்றைய ரூபா தாள்கள் செல்லும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ரூ.2 ஆயிரம் தாள்களில் 'நானோ சிப்' உள்ளடக்கம்



சென்னை, நவ.10

இந்தியாவில் புழங்கும் கறுப்பு பணத்தை கண்காணிக்கும் வகையில் ரிசர்வ் வங்கியால் புதிதாக வெளியிடப்படும் 2 ஆயிரம் ரூபா தாள்களில் 'நானோ சிப்' உள்ளடக்கப் பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கறுப்புப் பணத்தை ஒழிக்க இந்திய அரசு பல்வேறு கட்ட நடவடிக் கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக இதுவரை புழக்கத்தில் இருக்கும் ரூ.500 மற்றும் ஆயிரம் ரூபா தாள்களை அரசு செல்லுபடியாகமாட்டா என அறிவித்துள்ளது.


இதனிடையே புதிதாக வெளிவரவிருக்கும் 2 ஆயிரம் ரூபா தாள்களில் நானோ சிப் பொருத்தப்பட்டுள்ளதாகவும், இதனால் அந்த ரூபா தாள்களின் புழக்கம் மற்றும் பதுக்கல் உள்ளிட்டவற்றைக் கண்காணிக்க முடியும் என்று தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது மட்டுமின்றி இந்த நானோ சிப் பொருத்தப்பட்டுள்ளதால் செயற்கைக்கோள்கள் வாயிலாக கண்காணிக்க முடியும் என்றும், கறுப்புப் பண நடமாட்டத்தை முற்றிலுமாக ஒழிக்கவும் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் இவை அனைத்தும் சமூகவலைத் தளங்களில் வெளியான கருத்துக்கள் என்றும் குறித்த நானோ சிப் ஒன்றை தயாரிக்கவே குறைந்தது ரூ.50 செலவாகும் என்றும் கூறப்படுகிறது.

இதனால் இதுபோன்ற ஒரு திட்டத்தை அரசு முன்னெடுக்குமா என்பது சந்தேகமே என்றும்

# ரூ.500, ரூ.1000 தாள்கள் வாங்க மறுப்பு ஏழுமலையானிடம் சென்றோர் திண்டாட்டம்!



திருமலை, நவ.10

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் தங்கும் விடுதி, பஸ்களில் ரூ.500, ஆயிரம் ரூபா தாள்களை வாங்க மறுப்பதால் பக்தர்கள் கடும் திண்டாட்டத்தில் உள்ளனர்.

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. நேற்று முன்தினம் காலை முதல் 70 ஆயிரம் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு தொடக்கம் ரூ.500, ஆயிரம் ரூபா தாள்கள் செல்லுபடியாகா என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள ஏ.ரி.எம். நிலையங்கள் மூடப்பட்டன. இதனால் திருப்பதி பக்தர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

திருமலையில் உள்ள தங்கும் விடுதிகளில், மற்றும் விடுதிகளில் ரூ.500, ஆயிரம் தாள்கள் வாங்க மறுத்தனர். இதனால் பக்தர்கள் திணறினர்.

ஆந்திர அரசு பஸ்களிலும் ரூ.100 வரை மட்டுமே வாங்கப்பட்டது. இதனால் வெளியூர் பக்தர்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல முடியாமல் தவித்தனர்.

பக்தர்கள் போக்குவரத்து அலுவலகத்தை முற்றுகையிட்டனர். வெளியூர் பக்தர்கள் சொந்த ஊருக்குச் செல்ல தேவஸ்தானம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

ஏழுமலையான் கோயில் உண்டியலில் ரூ.2 கோடி கிடைக்கப் பெற்றுள்ளது.

உண்டியலில் செலுத்துவதற்கு ரூ.500, ஆயிரம் தாள்கள் எந்தத் தடையும் இல்லை.

பக்தர்கள் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் உண்டியலில் செலுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதரக அதிகாரிகள் 8 பேர் நாடு திரும்பினர்

டில்லி, நவ.10

பாகிஸ்தான் அபாண்டமாகக் குற்றம் சாட்டிய இந்திய தூதரக அதிகாரிகள் 8 பேர் இஸ்லாமாபாத்தில் இருந்து நேற்று முன்தினம் நாடு திரும்பினர்.

2 வாரங்களுக்கு முன்பு பாகிஸ்தானின் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ.க்கு உளவு பார்த்தனர் என்று 3 பேரை பிடித்து டில்லி பொலிஸார் விசாரணை நடத்தினர். அவர்களிடம் இருந்து பல்வேறு முக்கிய ஆவணங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

அப்போது, பிடிபட்டவர்களில் ஒருவரான மெஹ்மூத் அக்தர் என்பவர், தான் டில்லியில் உள்ள இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றுகின்றேன் என்று தெரிவித்தார். பாகிஸ்தான் தூதரக அதிகாரி ஒருவரே அந்த நாட்டுக்காக உளவு பார்த்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து அவரை நாட்டை விட்டு வெளியேறும்படி இந்தியா உத்தரவிட்டது. இதனால் மெஹ்மூத் அக்தரை பாகிஸ்தான் திரும்பப் பெற்றுக் கொண்டது.

தனது தூதரக அதிகாரியால் சர்வதேச அளவில் தலைகுனிவைச் சந்தித்த பாகிஸ்தான் மறுநாளே இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதரகத்தில் பணியாற்றி வந்த அதிகாரி சுர்ஜித் சிங், இந்தியாவுக்காக உளவு பார்த்தார் என்று அபாண்டமாகக் குற்றம் சுமத்தி நாட்டை விட்டு வெளியேற உத்தரவு பிறப்பித்தது. அதையடுத்து அவரை இந்தியா திரும்பப் பெற்றுக் கொண்டது.

இந்தநிலையில் பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த விவகாரத்தில் டில்லியில் மேலும் 5 பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளுக்குத் தொடர்பு இருப்பது உறுதியான ஆதாரங்கள் மூலம் தெரியவந்தது. இதைத்தொடர்ந்து அவர்களையும் பாகிஸ்தான் திரும்பப் பெறுவதாக அறிவித்தது. (எ)

# ஜனாதிபதியானார் ட்ரம்ப்! சரிந்தது பங்குச்சந்தை!!

## முடங்கியது கனடா குடியேற்ற இணையத்தளம்



வொஷிங்டன், நவ.10
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக வெற்றி பெற்றுள்ளார்.

இந்தநிலையில் சர்வதேச அளவில் பங்குச்சந்தை கடும் வீழ்ச்சியைச் சந்தித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

டொனால்ட் டிரம்பின் வெற்றி வாய்ப்பு அமெரிக்க பங்குச் சந்தையை மட்டுமின்றி சர்வதேச முதலீட்டாளர்களையும் பெரிதும் பாதித்துள்ளது.

அதிக பரபரப்புகளுக்கு இடையே இந்தத் தேர்தல் தற்போது நடைபெற்று முடிவடைந்துள்ளது. டொனால்ட் ட்ரம்ப் 276 தேர்தல் தொகுதி வாக்குகள் பெற, ஹிலாரி 218 வாக்குகள் மட்டுமே பெற்றார்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை 2011ஆம் ஆண்டு ஒகஸ்ட்டுக்கு அடுத்ததாக அந்த நாட்டு பங்குச்சந்தை 5.5 சதவீதம் சரிந்துள்ளது.

ஆசியாவில் உள்ள ஜப்பான், ஹொங்கொங் உள்ளிட்ட நாடுகளில் உள்ள முக்கிய நிறுவனங்களின் பங்குச்சந்தை மதிப்புகள் ஓர் இரவில் அதிரடியாகச் சரிந்துள்ளன. இதனால் உலகம் முழுவதும் முதலீட்டாளர்கள் பெரும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். மெக்சிக்கோ நாட்டின் நாணய மதிப்பு 1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பெரிய சரிவைக் கண்டுள்ளது.

மேலும், தங்கத்தின் மதிப்பு சுமார் 4.5 சதவிகிதம் வரை அதிகரித்துக் காணப்படுகிறது. ஜப்பான் நாட்டின் நாணய மதிப்பு டொலருக்கு எதிராக 3 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதுமட்டுமில்லாமல், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் மதிப்பு ஒரு பரலுக்கு 44 டொலர் என்ற மதிப்பில் 4 சதவீதம் வரை குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### கனடா குடியேற்ற இணையத்தளம் முடக்கம்

இதேவேளை டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்றுள்ளதால் கனடா குடியேற்ற இணையத் தளம் முடங்கியது.

டிரம்ப் வெற்றி பெற்றுள்ளதால் அமெரிக்கர்கள் மீண்டும் கனடாவுக்குச் செல்ல தடை விதிக்கப்படுமோ என்ற அச்சம் அமெரிக்க மக்கள் மனதில் எழுந்துள்ளது. இதனால் பலரும் ஒரே நேரத்தில் கனடா குடியேற்ற இணையத்தளத்தைப் பார்வையிட்டு, அதில் சந்தேகங்களையும் கவலைகளையும் பதிவிட்டனர். இதனால் கனடா குடியேற்ற இணையத்தளம் (http://www.cic.gc.ca/ முடங்கியது.

கனடா குடியேற்ற இணையத்தளத்தில் இத்தகைய பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக டுவிட்டரில் பலரும் குறிப்பிட்டமையை அடுத்து, விவரம் அறிந்த குடியேற்ற அதிகாரிகள், இணையத்தளத்தை சீரமைக்கும் பணியில் இறங்கி உள்ளனர்.

இதற்குமுன்னர் கடந்த பெப்ரவரி மாதம் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டிரம்ப் வெற்றி பெறுவதற்கே அதிக சாத்தியக் கூறுகள் உள்ளன என்று கருத்துக்கள் வெளியானதால் அமெரிக்காவில் உள்ள அகதிகள் பலரும் கனடாவின் அட்லாண்டிக் கடற்கரை வழியாகத் தப்பிச் செல்ல முயன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே கனடாவுக்குப் புலம்பெயர்ந்தவர்கள் அவர்களின் கலாசார பாரம்பரியங்களைக் கொண்டு வந்து, தங்கள் நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொள்ளும்படி கனடா அரசு தெரிவித்துள்ளது. (ஏ)

## ஐ.எஸ்.தீவிரவாதிகள் ஜேர்மனில் கைது

பெர்லின், நவ.10
ஐ.எஸ். தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த 5 பேரை ஜேர்மனியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்களில் ஐ.எஸ் மூத்த போராளிகளும் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியின் வடக்கு மற்றும் மேற்கு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 22 வயதான ஜிகார்தி ஒருவர், ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் சிரியாவில் பல மாதங்கள் தங்கியிருந்தவர் என்றும், அவர் துருக்கியில் தாக்குதல் மேற்கொண்டவர் என்றும் அறிய வருகிறது.

இந்தநிலையில், அவர் கடந்த செப்ரெம்பர் மாதம் ஜேர்மனிக்குச் சென்றுள்ளார். என்று கூறப்படுகிறது. (ஏ)



அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக டொனால்ட் டிரம்ப் தெரிவாகியுள்ளார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பிரதான வேட்பாளர் ஹிலாரி தோல்வியடைந்துள்ளார். ஹிலாரியின் தோல்வி எவராலும் எதிர்பார்க்கப்படாதது. இந்தநிலையில் அவரது தோல்வியைத் தாங்க முடியாத ஆதரவாளர்கள் அழுது புலம்பும் காட்சிகள் இணையங்களில் வெளியாகியுள்ளன.

## புதிய அரசுடன் இணைந்து செயற்பட சீனா ஆவல்

டொனால்ட் டிரம்ப் தலைமையில் அமைய உள்ள புதிய அமெரிக்க அரசுடன் இணைந்து செயற்பட ஆவலாக உள்ளோம் என்று சீனா அறிவித்துள்ளது.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட உடனேயே சீன வெளியுறவுத் துறை சார்பில் அறிக்கை ஒன்று வெளியிடப் பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அமெரிக்கா-சீனா இடையேயான உறவானது நீடித்த ஆரோக்கியமான ஒன்றாக அமையத் தேவையான கூட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நம்புவதாகவும், அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

## ஐ.நா.பாதுகாப்புச் சபையில் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு பாக்.எதிர்ப்பு

நியூயோர்க், நவ.10
ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு பாகிஸ்தான் கடும் எதிர்ப்புத் தெரிவித்து போர்க்கொடி தூக்கி உள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தற்போது அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய 5 நாடுகள்தான் நிரந்தர உறுப்பினர்களாக உள்ளன. மாறிவரும் சூழலுக்கு ஏற்ப ஐ.நா. பாதுகாப்புச் சபையில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும், நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரித்து, தன்னையும் நிரந்தர உறுப்பினராக்க வேண்டும் என்று இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

ஆனால் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு பாகிஸ்தான் கடும் எதிர்ப்புத் தெரிவித்து போர்க்கொடி தூக்கி உள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தான் தூதர் மலீஹா லோதி ஐ.நா.பொதுச் சபையில் நேற்றுமுன்தினம் பேசினார். இதன் போது அவர் தெரிவித்ததாவது;

"பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதை பாகிஸ்தான் உறுதிபட எதிர்க்கிறது.

அப்படி நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது என்பது, ஐ.நா. சபையின் சாசனத்துக்கு எதிரானது.

அதேநேரத்தில், நிரந்தரமில்லா உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்துவது என்பது, பாதுகாப்புச் சபையை மேலும் ஜனநாயகமான அமைப்பாக்கும். வெளிப்படையானதாக்கும். வலுவானதாக்கும்"-என்றார். (ஏ)

## இந்தியாவுடனான நல்லுறவு தொடரும்

### அமெரிக்க துணைத் தூதுவர் தெரிவிப்பு

தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் இந்தியாவுடன் அமெரிக்க நல்லுறவு தொடரும் என்று அமெரிக்க துணை தூதர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவு குறித்து இந்தியாவுக்கான அமெரிக்க துணை தூதர் பிலிப்மின் கூறியதாவது:

"அமெரிக்காவில் ஜனநாயக முறைப்படி சுதந்திரமாகவும், நேர்மையாகவும் தேர்தல் நடைபெற்றுள்ளது. யார் வெற்றி பெறுகிறார்கள் என்பது முக்கியமல்ல. இந்த ஜனநாயக வெற்றியை இன்று அனைத்து நாடுகளோடும் உறவுகளை மேம்படுத்தும் வகையில் கொண்டாடுகிறோம்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும், இந்தியப் பிரதமர் மோடியும் இருநாடுகளுக்கு இடையே நல்லுறவுக்காக வலுவான அடித்தளத்தை அமைத்துள்ளார்கள். இந்த நல்லுறவு தொடரும்."-என்றார். (ஏ)

## சிரியாவில் விமானத் தாக்குதல்; குழந்தைகள் 7 பேர் உயிரிழப்பு

### மனித உரிமைகள் கண்காணிப்பு மையம் தெரிவிப்பு



டமாஸ்கஸ், நவ.10
சிரிய-ரஷ்யா கூட்டுப்படைகள் நடத்திய வான்வெளித் தாக்குதலில் 7 குழந்தைகள் உயிரிழந்தனர் என்று சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் மற்றும் ஐ.எஸ் தீவிர வாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஜனாதிபதி அசாத் தலைமையிலான அரசு தரப்பு மற்றும் ரஷ்ய கூட்டுப்படைகள் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.

இந்தநிலையில் கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள இட்லிப் மாகாணத்தில் சிரிய-ரஷ்யா கூட்டுப்படைகள் நடத்திய வான் வெளி சோதனைத் தாக்குதலில் 7 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

இட்லிப் மாகாணத்தின் தெற்கில் உள்ள கான் ஷேகு நகரைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது எனப் பிரிட்டனை மையமாகக் கொண்டு செயற்படும் சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், தன் மீதான குற்றச்சாட்டை ரஷ்யா மறுத் துள்ளது. குறிப்பிட்ட அந்தப் பகுதியில் தங்களது விமானம் தாக்குதலை நடத்தவில்லை என்று ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சகம் திட்ட வட்டமாக தெரிவித்துள்ளது. (ஏ)





வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கரைச்சி பிரதேச சபை பொதுநூலகத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி ஈட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று கரைச்சி பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நடைபெற்று முடிந்த போட்டிகளில் வெற்றி ஈட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கினார். இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் தவநாதன் , பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரபாகரன், கரைச்சி பிரதேச செயலாளர் கம்சனாதன் கரைச்சி பிரதேச சபை உத்தியோகத்தர்கள் , மாணவர்கள், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(ஐ-81)

# வவுனியா தொழில்நுட்பக் கல்லூரிக்கு விடுதி வசதியை ஏற்படுத்தித் தாருங்கள்

## கோரிக்கை விடுக்கிறார் கல்லூரி அதிபர்

வவுனியா, நவ.10

வவுனியா தொழில்நுட்பக் கல்லூரிக்கு விடுதி வசதி அமையுமாக இருந்தால் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் இங்கு கற்பதற்கு வருகை தருவார்கள்.

இவ்வாறு வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் ஆ.நற்குணேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த நிலையில் அது தொடர்பாக கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கடந்த வீருடம் 645 மாணவர்கள் எமது தொழில்நுட்பக் கல்லூரியில் பதிவை மேற்கொண்டிருந்தனர். இவர்களில் 500 மாணவர்களே பரீட்சையில் தோற்றவுள்ளனர்.

145 மாணவர்கள் இடைவிலகிவிட்டனர். இடை விலகியவர்கள் தூர இடங்களில்இருந்து வருவதால் போக்குவரத்து பிரச்சினைகள் காரணமாகவே இடைவிலகினர். தங்குமிடங்களுக்கும் அதிகளவான நிதியை செலவிட வேண்டிய நிலையும் அவர்களுக்கு ஏற்பட்டது.

எனவே எமது தொழில்நுட்பக்கல்லூரியில் விடுதி வசதி இருக்குமாயின் அதிகளவான மாணவர்கள் தங்கி நின்று கற்கக் கூடியதாக இருக்கும். இடைவிலகலும் குறையும்.-என்றார்.

இந்த நிலையில் எதிர்வரும் 21 ஆம் திகதி முடிவுத் திகதியிடப்பட்டு24பாடநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவற்றில் முழு நேர பயிற்சி நெறிகள் இலவசமாக கற்பிக்கப்படுவதோடு. அவர்களுக்கு பயண பற்றுச் சீட்டுகளும் 1000 ரூபா ஊக்குவிப்பு பணமும் வழங்கப்படவுள்ளன.

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த 17 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ-100)

# இரு பாரவூர்திகள் மோதி விபத்து; புளியங்குளத்தில் ஒருவர் காயம்



வவுனியா, நவ.10

வவுனியா, புளியங்குளம், ஏ-9 வீதியில்செவ்வாய்க்கிழமை இரவு 11.15 மணியளவில் இரண்டு பாரவூர்திகள் மோதி விபத்துக்குள்ளாகின.

இதில் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புளியங்குளம் ஏ - 9 வீதியில் பயணித்த இரு பாரவூர்திகள் ஒன்றையொன்று முந்திச் செல்லவதற்கு முற்பட்டபோது விபத்து ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புளியங்குளம் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# வவுனியாவில் தோட்டக் காணியில் வெடிக்காத நிலையில் ஷெல்கள் மீட்பு



வவுனியா, நவ.10

வவுனியா, ஓயார் சின்னக்குளம் பகுதியில் உள்ள தோட்டக் காணியிலிருந்து செவ்வாய்க்கிழமை வெடிக்காத நிலையில் காணப்பட்ட நான்கு ஷெல்கள் வவுனியா பொலிஸாரால் மீட்கப்பட்டன.

வவுனியா, ஓயார் சின்னக்குளம், நான்காம் ஒழுங்கை பகுதியில் இருந்த தனது தோட்டக் காணியை காணி உரிமையாளர் துப்பரவு செய்தபோது மண்ணில் புதையுண்ட நிலையில் இருந்த நான்கு ஷெல்களைக் கண்டுள்ளார்.

இதனையடுத்து உடனடியாக அப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டது. அவர் ஊடாக வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அங்கு வந்த வவுனியாப் பொலிஸார் நீதிமன்ற அனுமதியைப் பெற்று விசேட அதிரடிப் படையினர் மூலம் ஷெல்களை செயலிழக்கச் செய்தனர்.

(ஐ-100)

# இடிந்துபோயுள்ள கிணற்றை புனரமைக்கக் கோரும் மக்கள்

கிளிநொச்சி, நவ,10

கிளிநொச்சி அக்கராயன் இம்மாஸ் நகரில், கடந்த இரண்டு ஆண்டுகளுக்குமுன்னர் இடிந்து விழுந்த பொதுக்கிணறு, இதுவரை புனரமைக்கப்படவில்லை.

இதனால் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று கிராமமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இம்மாஸ் நகரில் நாற்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இக்கிணற்றில் இருந்து குடிதண்ணீர் எடுத்து பயன்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கிணற்றைப் புனரமைத்துத் தாருங்கள் என அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அக்கோரிக்கை, இதுவரை நிறைவேற்றப்படவில்லை என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில், குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொள்ளும் கிராமங்களில் ஒன்றாக அக்கராயன் கிராமமும் உள்ளது.

எனவே, உரிய அதிகாரிகள் இக்கிணற்றை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ)




*முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்து மாமன்றம் இல்லாமை தொடர்ந்தும் குறைபாடாக உள்ளது.*

*இன்றைய சமூகத்தின் போக்கில் சமயம் சார்ந்த செயற்பாடுகளின் அவசிய தேவையைக் கருத்தில் கொண்டு பிரதேச செயலக மட்டத்தில் இந்து மாமன்ற குழுக்களை அமைக்கும் செயற்பாடு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசாவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஏற்கனவே மாந்தை கிழக்கு துணுக்காய் பிரதேச செயலகமட்டத்தில் பிரதேச ரீதியாக குழுக்கள் அமைக்கப்பட்ட நிலையில் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலகங்களில் அந்த பிரதேச கோயில் சார்ந்த நிர்வாகத்தினரை ஒன்று கூட்டி குழுக்களும் அமைக்கப்பட்டன. தொடர்ந்து பிரதேச செயலக மட்ட குழுக்களை ஒன்று கூட்டி மாவட்ட மட்ட இந்து மாமன்ற குழுவை அமைப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*(ஐ-81)*

# ஒட்டுசுட்டானில் கலாசார விழா

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச கலாசார விழா எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய. அனிருத்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது. பாரம்பரிய கலாசாரங்களைச் சித்தரிக்கும் வகையிலான ஊர்திப்பவனி விழாவுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் நீர்ப்பாசனத் திணைக்களத்திலிருந்து பிரதேச செயலகம் வரை சென்று செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதான நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

விழாவின் சிறப்பம்சமாக மலர் வெளியீடும் மூத்த கலைஞர்கள் கௌரவிப்பும் பண்டாரவன்னியன் விருதும் வழங்கப்படவுள்ளன.

# கடந்தகாலத் தவறுகளைத் திருத்தி விளையாடுவதே எமது இலக்கு

## இலங்கை மகளிர் கிரிக்கெட் அணித் தலைவி இனோக்கா





கடந்த காலங்களில் நாம் விட்ட தவறுகளைத் திருத்தி விளையாடுவதே எமது இலக்கென இலங்கை மகளிர் அணியின் புதிய தலைவியான இனோக்கா ரணவீர தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து மகளிர் அணி இலங்கை அணியுடன் 4 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்று விளையாடவுள்ளது. இதன் முதலாவது போட்டி நேற்று கொழும்பு எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இரு அணித் தலைவிகளும் இணைந்து கருத்துத் தெரிவித்தனர்.

இதன் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே இனோக்கா ரணவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகிலுள்ள அணிகளுள் இங்கிலாந்து அணி மிகத் தலை சிறந்த அணியாகத் திகழ்கின்றது. இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழு நல்லதொரு அணியை தெரிவுசெய்து தந்துள்ளது. அதில் நல்ல திறமையான இளம் வீரர்கள் உள்ளனர்.

நாம் கடந்த காலத்தில் விட்ட தவறுகளைத் திருத்தி இங்கிலாந்து அணிக்கெதிரான தொடரில் விளையாடுவதே எமது இலக்கு. இந்நிலையில் எமது புதியதொரு பயிற்றுவிப்பாளர் நம்பிக்கையாகவுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

இத் தொடரின் முதலாவது ஒருநாள் போட்டி நேற்று 9 ஆம் திகதி எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் இடம்பெற்றது. 2 ஆவது ஒருநாள் போட்டி 12 ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்திலும் 3 ஆவது நான்காவது போட்டிகள் முறையே 15 ஆம், 17 ஆம் திகதிகளில் அதே பிரேமதாஸ மைதானத்திலேயே இடம்பெறவுள்ளன.

## மின்னொளி, உதயசூரியன் அணிகள் வெற்றி



அம்பாறை திருக்கோவில் விநாயகபுரம் மின்னொளி விளையாட்டுக் கழத்தின் 38 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, மிகப்பிரமாண்டமாக கிரிக்கெட், கால்பந்தாட்டம், கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளுக்கான இறுதிப் போட்டிகள், மின்னொளி விளையாட்டுத் திடலில், அக்கழகத்தின் தலைவர் து.சுரேந்திரன் தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்றன.

இதன்போது, கால்பந்தாட்டம்,கரப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளில், விநாயகபுரம் மின்னொளி அணி சம்பியனாகத் தெரிவானதுடன், கிரிக்கெட் சுற்றுப் போட்டியில், திருக்கோவில் உதய சூரியன் அணி சம்பியனாகத் தெரிவாகியது.

இச்சுற்றுப் போட்டிகள், கடந்த மாதம் ஏழாம் திகதி ஆரம்பமாகி, தொடர்ந்து போட்டிகள் இடம் பெற்று வந்ததுடன், இச்சுற்றுப் போட்டிகளில், இன ஒற்றுமையை மேம்படுத்தும் வகையில், அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய இரண்டு மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள், முஸ்லிம் விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றி இருந்தன.

இந்நிலையிலேயே, கடந்த வாரயிறுதியில் இறுதிப் போட்டிகள் இடம்பெற்றன. இதில், திருக்கோவில் உதயசூரியன் கிரிக்கெட் அணிக்கும் திருக்கோவில் சுப்பர்ஸ்டார் கிரிக்கெட் அணிக்கும் இடையில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில், திருக்கோவில் சுப்பர்ஸ்டார் அணியை வீழ்த்திய திருக்கோவில் உதயசூரியன் அணி, அமரர் காளிகுட்டி அழகையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தையும் 15,000 ரூபா பணப் பரிசையும் தனதாக்கிக் கொண்டது.

## மைலோ கோப்பை உதைபந்தாட்டப் போட்டி இறுதிச் சுற்றுக்கு நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் தெரிவு



மைலோ கோப்பை உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இறுதிச் சுற்றுக்கு நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் தெரிவாகியுள்ளது.

மைலோ நிறுவனத்தினால் நடாத்தப்படும் 2016 ஆம் ஆண்டுக்கான மைலோ கோப்பை உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் முதல்தர சுற்றுப் போட்டிகளில் நவிண்டில் கலைமதி வி.கழகம் முதல்தர போட்டிகளில் வெற்றிபெற்றது.

இந் நிலையில் மாவட்ட ரீதியான போட்டியில் புங்குடுதீவு நசரத் விளையாட்டுக்கழகத்ததுடன் நவிண்டில் கலைமதி வி.கழகம் மோதுகிறது. இன்று 9.00 மணியளவில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இந்தப் பலப்பரீட்சை இடம்பெறவுள்ளது.

நவிண்டில் கலைமதி வி.கழகம் 2014 ஆம் ஆண்டு மைலோ கோப்பை சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ்வி.கழகத்துடன்மோதி 2 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மைக்கல் வெற்றிக் கிண்ணம் யங்ஹென்றீஸ் வசமானது!



மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் 2015 இன் தொடர்ச்சியான ஆட்டத்தின் இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றீஸ் மற்றும் றோயல் அணிகள் மோதின. ஆட்ட நேரமுடிவில் யங் ஹென்றீஸ் அணி 3-2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று மைக்கல் கிண்ணத்தை தனதாக்கியது.

முதல் பாதியாட்டத்தின் 9 ஆவது நிமிடத்தில் றோயல் அணி வீரர் கஜகோபன் கோல் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். முதல் பாதியாட்டம் 01:00 என்ற அடிப்படையில் நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்தில் 33 ஆவது நிமிடத்தில் ஹென்றிஸ் வீரர் மதுன் கோல் போட்டு ஆட்டத்தை சமப்படுத்த, ஆட்டம் தொடர்ந்தது. 41 ஆவது நிமிடத்தில் ஹென்றீஸ் வீரர் மகீபன் கோல் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார்.

மீண்டும் 44 ஆவது நிமிடத்தில் ஹென்றீஸ் வீரர் அனோஜன் கோல் போட்டு அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். ஆட்டத்தை மாற்ற போராடியது றோயல் யங்ஹென்றீஸ். பின்களம் வலுவாக காணப்பட்டது. இருப்பினும் இறுதி நேர முடிவின் போது றோயல் அணி வீரர் கஜகோபன் கோல் போட்டு அசத்தினார். இறுதியாட்ட நேர முடி வில் 03:02 என்ற ரீதியில் றோயல் அணியை வீழ்த்தி யங்ஹென்றீஸ் அணி கிண்ணத்தை வென்றது.

ஆட்ட நாயகனாக யங்ஹென்றீஸ் வீரர் அனோஜன் தெரிவு செய்யப்பட்டார். தொடர் ஆட்ட நாயகனாக றோயல் அணி வீரர் கஜகோபன் தெரிவு செய்யப்பட்டார். 7 பேர் கொண்ட தொடர்களில் அசத்திவரும் யங் ஹென்றீஸ் அணி 2016 இல் இடம்பெற்ற தொடர்களில் அதிக தடவை இறுதிக்குள் நுழைந்து அதிகமாக வெற்றிக்கிண்ணத்தை தவறவிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது நாவாந்துறை கலைவாணியும்




மைலோ கோப்பை உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாண லீக்கிலிருந்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டு கழகம் இறுதிச் சுற்றுக்கு முதல் முறையாகத் தெரிவாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் முதற் போட்டியில் ஞான முருகன் விளையாட்டுக் கழகத்தை 1-0 என்ற கோல் கணக்கில் கலைவாணி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. அடுத்த சுற்றுக்கான போட்டியில் பாரதி விளையாட்டுக் கழகத்தை 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்குள் நுழைந்துள்ளது.

### இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட்:

# வலுவான நிலையில் இங்கிலாந்து



ராஜ்கோட், நவ.10

இந்தியா - இங்கிலாந்து இடையேயான முதல் கிரிக்கெட் டெஸ்ட் போட்டி ராஜ்கோட்டில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியை வென்ற இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்துள்ளது. இந்திய அணியில் 5 பந்து வீச்சாளர்கள் இடம்பெற்றுள்ளனர். பாண்டியா, கருண் நாயர் ஆகிய இருவருக்கும் அணியில் இடம் கிடைக்கவில்லை.

கடந்த 30 ஆண்டுகளில், இந்தியாவில் முதல்முறையாக 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடத்தப்படுகிறது. அதேபோல், ராஜ்கோட் மைதானத்தில் நடத்தப்படும் முதல் டெஸ்ட் போட்டி இதுவாகும். இதுதவிர, இந்தியாவில் நடத்தப்படும் டெஸ்ட் தொடர்களிலேயே முதல் முறையாக, இந்தத் தொடரில் டி.ஆர்.எஸ். எனப்படும், நடுவர் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யும் முறை சோதனை அடிப்படையில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. கடந்த 2012, 2014 ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்து அணியிடம் டெஸ்ட் தொடரில் அடைந்த தோல்விக்கு பதிலடி கொடுக்கும் முனைப்பில் இந்திய அணி களமிறங்கியுள்ளது.

ஆரம்ப ஓவர்களில் இந்திய களத்தடுப்பாளர்கள் அடுத்தடுத்து பிடிகளை தவற விட்டனர். இதனால் இங்கிலாந்து அணிக்குச் சாதகமான நிலை உருவாகுமா என்று தோன்றியது.

கடந்தமுறை அசத்தலாக ஆடிய குக், இந்தத் தொடரின் முதல் டெஸ்டில், 21 ஓட்டங்களில் ஜடேஜா பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். டி.ஆர்.எஸ். முறையை அவர் பயன்படுத்தியிருந்தால் தப்பித்திருப்பார். ஆனால் அவர் அதைச் சரியாகக் கணிக்க மறந்துவிட்டார்.

இதையடுத்து அஸ்வின் தனது திறமையை அற்புதமாக வெளிப்படுத்தினார். ஹசீப் ஹமீதும் எல்.பி.டபிள்யூ முறையில் அஸ்வினிடம் 31 ஓட்டங்களில் வீழ்ந்தார். ஹசீப், நடுவரின் தீர்ப்புக்கு எதிராக டி.ஆர்.எஸ். முறையைப் பயன்படுத்தினார். ஆனால், அதிலும் அவர் ஆட்டமிழந்தார் என்றே அறிவிக்கப்பட்டது. அடுத்தச் சில ஓவர்களில் பென் டக்கெட் 13 ஓட்டங்களில் ரஹாவிடம் பிடி கொடுத்து அஸ்வின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

உணவு இடைவேளையின் போது இங்கிலாந்து அணி 32.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 102 ஓட்டங்களை எடுத்தது. இதற்குப் பிறகு இந்திய அணி பந்து வீச்சில் ஆதிக்கம் செலுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நடந்ததோ வேறு. 4 ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த ஜோ ரூட்டும் மோயின் அலியும் இந்தியப் பந்துவீச்சை சிறப்பாக எதிர்கொண்டார்கள்.

விராட் கோஹ்லியின் திட்டங்கள் எதுவும் செல்லுபடியாகவில்லை. சற்று வேகமாக ஆடிய ரூட், 72 பந்துகளில் அரைச் சதம் எடுத்தார். 172 பந்துகளில் இந்தக் கூட்டணி 100 ஓட்டங்களை எடுத்து இங்கிலாந்து அணிக்குப் பெரும் உதவியாக இருந்தது. 61 ஆவது ஓவரின்போது தசைப்பிடிப்பு காரணமாக ஷமி பாதி ஓவரிலேயே மைதானத்தை விட்டு வெளியேறினார். இதனால் இந்திய அணிக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ரூட் 92 ஓட்டங்களில் இருந்த போது விராட் கோஹ்லி எல்.பி.டபிள்யூ அப்பீல் கோரி டி.ஆர்.எஸ் கோரிக்கை வைத்தார். ஆனால் மூன்றாவது நடுவர் கோஹ்லியின் கோரிக்கையை நிராகரித்தார்.

தேநீர் இடைவேளையின் போது 3 விக்கெட் இழப்புக்கு 209 ஓட்டங்களை எடுத்த இங்கிலாந்து அணி வலுவான நிலையில் உள்ளது.

### ரஞ்சி கிரிக்கெட்:

# டில்லி வீரர் ரிஷாப் சாதனை



புதுடில்லி, நவ.10

ரஞ்சி கிரிக்கெட் போட்டியில் டில்லி வீரர் ரிஷாப் பான்ட் அதிவேக சதம் அடித்து சாதனை படைத்துள்ளார்.

ரஞ்சி கோப்பை கிரிக்கெட் போட்டியில் கேரள மாநிலம் தும்பாவில் நடந்த டில்லி-ஜார்கண்ட் ('பி' பிரிவு) அணிகள் இடையிலான லீக் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இந்த போட்டியில் கடைசி நாளான நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 2 ஆவது இன்னிங்ஸில் டில்லி அணியை சேர்ந்த 20 வயது விக்கெட் கீப்பரான ரிஷாப் பான்ட் 67 பந்துகளில் 8 பவுண்டரி, 13 சிக்சருடன் 135 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தார். அவர் 48 பந்துகளில் சதத்தை எட்டியுள்ளார்.

இதன் மூலம் ரிஷாப் பான்ட் முதல் தரப் போட்டியில் குறைந்த பந்தில் சதம் அடித்த இந்திய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். இதற்கு முன்பு 1988-89 ஆம் ஆண்டில் தமிழக வீரர் வி.பி.சந்திரசேகர், இரானி கோப்பை போட்டியில் ரெஸ்ட் ஆப் இந்தியா அணிக்கு எதிரான ஆட்டத்தில் 56 பந்துகளில் சதம் அடித்ததே இந்திய வீரரின் சாதனையாக இருந்தது.

அந்த 28 ஆண்டு கால சாதனையை ரிஷாப் பான்ட் நேற்று முன்தினம் தகர்த்தார். இந்த சீசனில் 5 ஆட்டங்களில் ரிஷாப் பான்ட் 4 சதங்கள் அடித்துள்ளார். இதில் 44 சிக்சர்களும் உள்ளடக்கம்.

## ஐ.பி.எல். வீரர்களின் ஏலம் பெப்ரவரியில்

புதுடில்லி, நவ.10

ஐ.பி.எல். வீரர்களின் ஏலம் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் இடம்பெறவுள்ளது.

ஐ.பி.எல். ஆட்சி மன்ற குழு கூட்டம் அதன் தலைவர் ராஜீவ் சுக்லா தலைமையில் டில்லியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கூட்டம் தொடர்பில் ராஜீவ் சுக்லா ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் -

'10 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு (2017) ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி தொடங்குவதற்கு பரிந்துரை செய்துள்ளோம். இதையொட்டி வீரர்களின் ஏலம் பெங்களூரில் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி நடைபெறும்' என்று தெரிவித்துள்ளார்.

# இங்கிலாந்து அணியில் இந்திய வம்சாவளி வீரர்

இங்கிலாந்து அணியில் இந்திய வம்சாவளி வீரர் ஹசீப் ஹமீத் புது முகவீரராக அடியெடுத்து வைக்கிறார்.

இங்கிலாந்து அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் போட்டி ராஜ்கோட் நேற்று மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிலையில், இந்திய அணியை வீழ்த்துவதற்கு சாதகமாக இந்திய வம்சாவளி வீரரை இங்கிலாந்து அணி தனது அணியில் இணைத்துள்ளது.

9 வயதான ஹசீப் ஹமீத் இங்கிலாந்து டெஸ்ட் வரலாற்றில் அறிமுகமான இளம் தொடக்க ஆட்டக்காரர் என்ற சிறப்பைப் பெற்றுள்ளார்.

இந்தியாவைப் பூர்வீகமாக கொண்ட இவரது தந்தை இஸ்மாயில் இந்தியாவில் இருந்து இங்கிலாந்துக்கு இடம் பெயர்ந்து குடியேறியவர் எனக் கூறப்பட்டது.




# மீண்டும் களத்தில் நடால்



காயம் காரணமாக டென் னிஸ் போட்டிகளில் இருந்து விலகியுள்ள ஸ்பெயின் டென்னிஸ் வீரர் ரபேல் நடால், டிசம்பரில் நடைபெறவுள்ள முபாதலா உலக டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டியின் மூலம் மீண்டும் களம் காண உள்ளார்.

இதுகுறித்து அவர் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில்,

அபுதாபியில் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள முபாதலா உலக டென்னிஸ் சம்பியன் ஷிப்பில் பங்கேற்பதன் மூலம், மீண்டும் போட்டிகளில் கலந்து கொள்ளத் தொடங்குகிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

# டி.ஆர்.எஸ். நியாயமானது: கோஹ்லி

டி.ஆர்.எஸ். முறை ரொக்கெட் விஞ்ஞானம் இல்லை, இதை அறிமுகம் செய்வதால் இந்திய அணி தூக்கம் இன்றி தவிக்கவில்லை என அணித் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

டி.ஆர்.எஸ். என்பது ரொக்கெட் விஞ்ஞானம் இல்லை. பந்து துடுப்பில் பட்டதா, லைனில் விழுந்ததா அல்லது லைனை தாக்கியதா என்பதை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.



இதுதான் கிரிக்கெட்டின் அடிப்படை விடயங்கள். அதற்காக டி.ஆர்.எஸ். வழியாகத்தான் செல்ல வேண்டும் என்பது அவசியம் இல்லை.

டி.ஆர்.எஸ். எப்படி பயன்படுத்தப்படுகிறது என்பதை நாங்கள் போதுமான அளவு டி.வியை பார்த்து அறிந்து கொண்டுள்ளோம். உண்மையில் இது பந்து வீச்சாளர் மற்றும் விக்கெட் காப்பாளரின் செயற்பாடுகளை பொறுத்தது.

குறிப்பிட்ட ஒரு நிகழ்வைப் பற்றி யோசிக்கும் போது மறு ஆய்வு செய்யப்பட வேண்டும் என்பது முக்கியமானது. இது மிகவும் எளிதானது. நடுவர் தீர்ப்பு சரியில்லை என்று நினைத்தால் அதை சரிசெய்து கொள்வதற்கு இது மற்றொரு வாய்ப்பை வழங்குகிறது. அவ்வளவுதான். இது நியாயம் என்றே கருதுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# மாணிக்கமடு புத்தர்சிலை விவகாரத்தால் முஸ்லிம் - சிங்கள அமைச்சர்கள் முரண்பாடு

## மாவட்ட ஒருங்கிணைப்புத் தலைமைப் பதவியைப் பறிக்கக் கோரிக்கை

கல்முனை, நவ.10

மாணிக்கமடு புத்தர்சிலை விவகாரத்தினால் நல்லாட்சி அரசில் அங்கம் வகிக்கும் - அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சிங்கள, முஸ்லிம் அமைச்சர்களிடையே முறுகல் நிலை தோன்றியிருக்கின்றது.

"மாணிக்கமடு புத்தர்சிலை விவகாரத்தில் கருத்து வெளியிட்டமையுடன் தமிழ், முஸ்லிம் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை அமைச்சர் தயாகமகே இழந்துவிட்டார். எனவே, மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் பதவியிலிருந்து அவர் நீக்கப்பட வேண்டும்."

–இவ்வாறு, பிரதி விளையாட்டு துறை அமைச்சரும், கல்முனை அபிவிருத்திக் குழுத் தலைவருமான எச்.எம்.எம். ஹரீஸ் கூறினார்.

கல்முனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மாணிக்கமடு மாயக்கல்வி மலையில், திடீரென வந்த ஒரு குழுவினரால் அத்துமீறி புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளமை தொடர்பிலும், இதன் பின்னணியில் பக்கபலமாகத் திகழ்ந்தார் எனக் கூறப்படும் ஆரம்ப கைத்தொழில் அமைச்சரும் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான தயாகமகே இந்த விடயம் தொடர்பில் வெளியிட்டுள்ள கருத்துக் குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதி அமைச்சர் சட்டத்தரணி ஹரீஸ் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையில் மேலும் கூறியவை வருமாறு:-

"இன்றைய நல்லாட்சி அரசு மத, கலாசார உரிமைகள் மற்றும் பாரம்பரிய பிரதேசங்களை மதித்து இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் பாதையில் பயணித்து வருகின்றது.

எனினும், பௌத்த மக்களே வாழாத அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மாணிக்கமடு தமிழ் கிராமமான மாயக் கல்வி மலையில் புத்தர் சிலை நிறுவப்பட்ட விவகாரம் சமூகங்களுக்கு இடையே விரிசலை ஏற்படுத்தி, அரசின் நல்நோக்கை சிதறடிக்கும் வகையில் அமைந்துள்ளது.

அதிலும் நல்லாட்சி அரசின் அமைச்சர் ஒருவரே இச்சிலை நிறுவுதல் விவகாரத்தை கையில் எடுத்து அரசியல் இலாபத்துக்காக முனைந்திருக்கின்றமை அதிர்ச்சியையும், வேதனையையும் தருவதாக அமைந்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் இன சௌஜன்யத்துடன் வாழ்ந்து வரும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே பாரிய பிளவையும் மனக் கசப்பையும் ஏற்படுத்தும் இத்தகைய செயலில் அவர் இறங்கி இருப்பது கண்டிக்கத்தக்க விடயமாகும்.

இந்த அமைச்சரான ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரும், அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான தயா கமகே கடந்த பொதுத் தேர்தலின் போது தம்மை இனவாதம் அற்ற - சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களின் நேச சக்தியாக - காட்டிக் கொண்டு வாக்கு வேட்டைக்காக ஆலாய்ப் பறந்து திரிந்தவர்.

இவர் மீது நம்பிக்கை கொண்ட 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுபான்மை மக்கள் அவருக்கு வாக்களித்திருந்தினர்.

மூவின மக்களிடையேயும் ஓர் உறவுப் பாலமாகவே அமைச்சர் தயா கமகேவை அம்பாறை மாவட்ட மக்கள் கருதினர்.

இவ்வாறு நம்பிக்கை கொண்ட மக்களுக்கு இன்று பேரதிர்ச்சியும் அச்சமும் ஏற்பட்டுள்ளது. அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை தவிடுபொடியாகியுள்ளது.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம், அம்பாறை கச்சேரி கேட்போர் கூடத்தில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றபோது ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரான அமைச்சர் தயா கமகே, மாணிக்கமடு புத்தர் சிலை விவகாரம் தொடர்பான கலந்துரையாடலில் கருத்து வெளியிட்டுள்ளார்.

'இந்த நாட்டில் புத்தர் சிலைகள் வைப்பதை எவராலும் தடுக்க முடியாது. புத்தர்சிலை வைப்பது நல்லாட்சியைப் பாதிக்குமென்று எவராவது கருதினால் எனது அமைச்சுப் பதவியைக் கூடத் துறக்க நான் தயாராக உள்ளேன்' எனக் கூறியுள்ள அவர். தீகவாப்பி விகாரைக்குச் சொந்தமான காணிகள் சுற்றிவர சுமார் 12 ஆயிரம் ஏக்கரிலிருப்பதாகவும் தீகவாப்பியின் வரலாறு பற் றிக் கூறும் புராதன நூலில் அது குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறுகிறார்.

இதனை அவதானிக்கின்ற போது கல்முனை முதல் பொதுத்துவில் வரையுள்ள காணிகள் தீகவாப்பி விகாரைக்கே சொந்தமாகின்றன.

அமைச்சரது இத்தகைய கூற்றுக்களும், செயற்பாடும் அவரது முகத்திரையைக் கிழித்து உண்மையான சொரூபத்தை வெளிப்படுத்தியுள்ளன.

இதன் மூலம் சிறுபான்மை மக்களின் நம்பிக்கையை அவர் இன்று இழந்துள்ளார்.

அதேவேளை, முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளாகிய எம்மையும் அவரைப் போன்று தீவிர கடும் போக்காளர்களாக மாற்றும் சூழலையும் அவர் உருவாக்கியுள்ளார்.

ஆனாலும், நாட்டின் சூழல், முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பு, எதிர்கால நலன் ஆகியன கருதி நிதானமாகச் செயற்பட வேண்டிய கட்டாயத்தில் நாமுள்ளோம்.

இந்த நிலையில் சிறுபான்மை மக்களின் நம்பிக்கையை இழந்துள்ள அமைச்சர் தயாகமகே பதவி வகிக்கும் அம்பாறை மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுத் தலைவர் பதவியிலிருந்து அவரை நீக்குவதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆவன செய்ய வேண்டும்.

நல்லாட்சியின் சகல சமூகங் களுக்கும் சமத்துவம், நல்லிணக்கம் எனும் கருப் பொருள் உறுதிப்படுத்தப்பட வழிவகுக்கப்பட வேண்டும்" - இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

(உ-150)

---

மத்திய வங்கி முறி மோசடி விவகாரம்

## அரசுக்கு 6 நிபந்தனைகள் ஜே.வி.பி. விதிப்பு

மத்தியவங்கியின் முறி மோசடி தொடர்பில் கோப் குழு முன்வைத்துள்ள அறிக்கையை அடிப்படையாக வைத்து அரசாங்கத்துக்கு மக்கள் விடுதலை முன்னணி ஆறு நிபந்தனைகளை முன்வைத்துள்ளது.

அக்கட்சியின் அரசியல்சபை இந்தத் தீர்மானத்தை முன்மொழிந் துள்ளது. இந்த ஆறு நிபந்தனைகளில் முறி மோசடிக்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அதிகூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த மோசடியுடன் தொடர்புடைய சகலரையும் சட்டத்தின் முன் கொண்டுவர வேண்டும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இம்மோசடியுடன் தொடர்புடைய எவருக்கும் அரசாங்கத்தின் பொருளாதார நடவடிக்கைகளுடன் தொடர்புபட இடமளிக்கக் கூடாது எனவும், அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள சகல பொறுப்புக்களும் இவர்களிடமிருந்து மீளப்பெறப்பட வேண்டும் எனவும் அக்கட்சி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இன்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இதனைக் கூறியுள்ளார்.

---

## ரூ.45 கோடி பெறுமதி கொக்கேயின் சிக்கியது

கொழும்பு, நவ.10

கொழும்பு களனி, பெத்தியாகொட பகுதியில் கொக்கேயின் களஞ்சியசாலை ஒன்று சிக்கியிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதியில் உள்ள களஞ்சிய சாலையின் கெண்டெயினர் (கொள்கலன்) ஒன்றுக்குள் இருந்து சுமார் 45 கோடி ரூபா பெறுமதியான 31 கிலோ கிராம் கொக்கேயின் போதைவஸ்து நேற்றுப் பிடிபட்டதாக பொலிஸ் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

---

# வித்தியா கொலை வழக்கின் விசாரணையைத் துரிதமாக்குக!

## சட்டமா அதிபருக்கு நீதிமன்று பரிந்துரை

யாழ்ப்பாணம், நவ.10

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலை வழக்கு தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் பரிந்துரை செய்துள்ளார்.

இந்த வழக்கின் ஒன்பது சந்தேக நபர்களின் ஒரு வருடத்துக்கான விளக்கமறியல் கடந்த 11.05.2016 ஆம் திகதி முடிவடைந்தது. தொடர்ந்து சட்டமா அதிபரினால் யாழ். மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட விசேட மனுவிற்கமைவாக விளக்கமறியல் காலம் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு நீடிக்கப்பட்ட காலம் நேற்றுடன் நிறைவடைந்த நிலையில் சந்தேகநபர்கள் நேற்று மீண்டும் யாழ். மேல்நீதிமன்றில் நீதிபதி எம்.இளஞ்செழியன் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் தொடர்பான பொலிஸ் விசாரணைகள் நிறைவுபெற்று வழக்குக்கோவை சட்டமா அதிபரின் பரிசீலனையில் உள்ளது. இதனால் சந்தேகநபர்களின் விளக்கமறியல் காலத்தை மேலும் மூன்று மாதங்கள் நீடியுங்கள் என்று சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி நாகரட்ணம் நிசாந்தன் மன்றில் ஆஜராகி மனுவொன்றை சமர்ப்பித்தார்.

இதை ஏற்றுக்கொண்ட மன்று மூன்றாம் கட்டமாகவும் ஒன்பது பேரின் விளக்கமறியலை மேலும் மூன்று மாதம் நீடித்து உத்தரவிட்டதுடன் சந்தேக நபர்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் எட்டாம் திகதிவரை தடுத்து வைக்குமாறும் உத்தரவு பிறப்பித்தது.

மேலும், சட்டமா அதிபரிடம் உள்ள இவ்வழக்கு கோவை மீதான விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் அரச சட்டத்தரணி ஊடாக நீதிபதி எம்.இளஞ்செழியன் கோரிக்கை விடுத்தார்

வழக்கின் 4ஆம் 7ஆம் மற்றும் 9ஆம் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி சந் தேக நபர்களை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரினார். அந்தப் பிணை மனுவும் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டது.

---



கொழும்பு லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் மூளாய் இந்து இளைஞர் மன்றம் இலவச கண் சிகிச்சை முகாம் ஒன்றை நடத்தியுள்ளது.
நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்படி மன்ற முன் பள்ளி மண்டபத்தில் இடம்பெற்ற இந்தச் சிகிச்சை முகாமில் 200 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்குகொண்டு பயன்பெற்றனர். (ம-53)

---

# நல்லாட்சி அரசாங்கத்தின் ஊழல் பேர்வழிகளில் முதலிடம் ரணிலுக்கு; அடுத்தவர் நீதியமைச்சராம்!

## இப்படிக் கூறுகிறது கூட்டு எதிரணித் தரப்பு

கொழும்பு, நவ.10

நல்லாட்சி அரசாங்கத்திலுள்ள ஊழல் பேர்வழிகள் பத்துப் பேரினால் நாட்டுக்கு 3 ஆயிரத்து இருநூறு கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என கூட்டு எதிர்க்கட்சி நேற்று அறிவித்துள்ளது. கூட்டு எதிர்க்கட்சி எம்.பியான மஹிந்தானந்த அளுத் கமகே இதனைத் தெரிவித்தார்.

இந்த பத்துப் பேரில் முதலாவது நபர் எமது பிரதமர். இவருக்கு எதிராக நாம் ஏற்கனவே லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாட்டை முன்வைத்துள்ளோம். இன்று இரண்டாவது நபரான நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்காவுக்கு எதிராக ஆணைக் குழுவில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த முறைப்பாடுகள் மிக விரைவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனத் தாங்கள் எதிர்பார்க்கின்றார்கள் என அவர் கூறினார்.

வாகனங்கள் இறக்குமதி தீர்வை விடயத்தில் வரிச்சலுகை பெற்றுக்கொடுத்து நாட்டுக்கு வரி இழப்புச் செய்துள்ளார் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மீது கூட்டு எதிர்க்கட்சியினர் லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்தனர்.

(மு)

காலைக்கதிர் Kalaikkathir



# ‘திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பு ஆவணம்’ நூல் வெளியீட்டில் நவநீதம்பிள்ளை

*முதற்பிரதியையும் பெற்றுக்கொண்டார்*

அமெரிக்க தமிழ்ச் சங்கத்தின் வருடாந்த நிகழ்வில் பிரித்தானிய தமிழர் பேரவையின் 8 மாத ஆய்வின் வெளிப்பாடான ‘திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பு ஆவணம்’ (Proliferating Buddhist Structures in Tamil Home land Sowing the Seeds of Disharmony) என்னும் ஆவணத் தொகுப்பு கடந்த 5 ஆம் திகதி அமெரிக்காவின் Monroe Township New Jersey என்னும் இடத்தில் வெளியிடப்பட்டது.

இந் நிகழ்வில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையாளர் டாக்டர் நவநீதம்பிள்ளை கலந்து கொண்டு ஆவணத் தொகுப்பின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

அந்த நிகழ்வில் சிறப்புரையாற்றிய நவநீதம்பிள்ளை இதனைத் தயாரித்து வெளியிட்ட பிரித்தானிய தமிழர் பேரவையைப் பாராட்டியதுடன் இவ்வாறான உண்மைத் தகவல்களின் அடிப்படையிலான ஆவணத் தொகுப்புகள் மேலும் வெளியிடப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இப்படியான ஆவணங்களை சர்வதேச சமூகத்திற்கு வழங்குவதன் ஊடாக விழிப்புணர்வினை ஏற்படுத்தலாம் என்றும் அவர் பிரித்தானிய தமிழர் பேரவைக்கு ஆலோசனை வழங்கினார். (ம)

# சனிக்கிழமைக்கு பின் அதிக மழை பெய்யும்

யாழ்ப்பாணம்,நவ.10

நாளை மறுதினம் சனிக்கிழமைக்கு பின்னர் நாட்டில் அதிக மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலைமைகளின் அடிப்படையில், தெற்கு, சப்ரகமுவ, மத்திய, மேல், ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல இடங்களில் பி.ப 2.00 மணிக்கு பிறகு அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ ஏற்படலாம்.

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடலோரப் பிரதேசங்களில் குறைந்தளவு மழைவீழ்ச்சி ஏற்படும். மேற்கு, சப்ரகமுவ மத்திய மற்றும் தென் மாகாணங்களின் சில இடங்களில் காலை வேளையில் பனி மூட்டத்துடன் கூடிய நிலைமை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் மின்னலினால் ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்காக பொதுமக்களை முன் எச்சரிக்கையாக இருக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ம)

# வரவு - செலவுத் திட்டத்தின் பின் சிறிய கார்களின் விலை குறையும்?

*வாகனங்களை இப்போதே விற்க கடும் முயற்சி*

நாட்டிலுள்ள வாகன விற்பனை நிலையங்களில் சிறிய கார்களை விற்பனை செய்வதற்கு வாகன விற்பனையாளர்கள் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வரவு– செலவு திட்டத்தின் பின்னர் சிறிய வாகனங்களின் வரி குறைய கூடும் என தகவல் வெளியாகியுள்ள நிலையில், பெரியளவிலான தள்ளுபடி வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுசுகி வாகனங்களை விற்பனை செய்யும் அஸோசியட்ஸ் மோட்டார்ஸ் நிறுவனம் கிட்டத்தட்ட ரூ.2 லட்சம் வரையில் தள்ளுபடி வழங்க ஆரம்பித்துள்ளது.

சிறிய பென்டா கார்களை விற்பனை செய்யும் மைக்ரோ நிறுவனம் தங்களின் வாகனத்தின் விலையை ஒரு லட்சம் ரூபா அளவில் குறைத்துள்ளது.

பொதுவாக கார் விற்பனையாளர்கள் வரவு செலவு திட்டத்திற்கு பின்னர் வரி அதிகரிக்க கூடும் எனவும் தற்போதே கொள்வனவு செய்துக் கொள்ளுமாறும் கூறுவார்கள். எனினும் இம்முறை அவர்கள் அமைதியாக உள்ளனர்.

அதிகமானோர் கார் கொள்வனவு செய்துக் கொள்ள கூடிய வரி முறையை முன்வைப்பதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளமையே இந்த அமைதிக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

# மேல் மாகாண சபையிலுள்ள அமைச்சரை நீக்குவதற்குச் சதி

கொழும்பு,நவ.10

மேல் மாகாண சபையிலுள்ள அமைச்சர் ஒருவரை பதவியிலிருந்து நீக்குவதற்கு சதி முயற்சியொன்று இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் மேல் மாகாண சபை வரவு செலவுத் திட்டத்தின் போது அந்த அமைச்சரின் அமைச்சுக்குரிய வரவு செலவுத்திட்டத்தை தோற்கடிப்பதன் மூலம் இவரை பதவி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

மேல் மாகாண சபை சுகாதாரம், சுதேச மருத்துவம், சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகார அமைச்சின் வரவு செலவுத் திட்டம் கடந்த வருடம் தோல்வியடையச் செய்ததுடன் குறித்த அமைச்சுப் பதவியை வகித்த நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்கத்தின் அமைச்சுப் பதவியும் நீக்கப்பட்டது.

மேல் மாகாண சபை வரவு–செலவுத் திட்டம் முதலமைச்சர் இசுர தேவப்பிரியவினால் எதிர்வரும் 22 ஆம் திகதி முன்வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வலிகாமம் மேற்கில் கிணறுகள் புனரமைப்பு

வலி.மேற்கு, நவ.10

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தூர்ந்து போன விவசாயக் கிணறுகளைப் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக பதினைந்து விவசாயக்கிணறுகளை புனரமைத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான பயனாளிகளைத் தெரிவுசெய்து இவர்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் புனரமைப்பு வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் வலி மேற்கு பிரதேச செயலக திட்டமிடல் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-53)

## இலங்கை ஜனாதிபதியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மைத்திரிபால,முதலில் டுவிட்டர் சமூக வலைத் தளம் ஊடாகத் தனது வாழ்த்தை வெளியிட்டார்.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள பாரம்பரிய நட்பு மற்றும் இரு நாடுகளுக்கும் பொதுவான கலாசார உறவுகளைத் தமது வாழ்த்தில் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது வாழ்த்துச்செய்தியில், ஜனாதிபதி ட்ரம்பின் நிர்வாகத்தின் கீழ் அமெரிக்க - இலங்கை உறவு மேலும் பலப்படும் என நம்பிக்கை தெரிவித்தார்.

## யுத்தக் குற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் ஒபாமா நிர்வாகமும் அதில் முன்பு வெளிவிவகாரச் செயலாளராகக் கடமையாற்றிய ஹிலாரி கிளிண்டனும் ஆசியாவை முதன்மைப்படுத்திய வெளிவிவகாரக் கொள்கையைக் கடைபிடித்தனர்.

‘இலங்கை அமைந்திருக்கும் தென்னாசியப் பிராந்தியத்திலும் அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கை அதிகம் கவனமும் ஈடுபாடும் தீவிரமும் செலுத்தியது. ஆனால் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி தோற்றுப் போய்விட்டார். அமெரிக்க நிர்வாகம் ஜனாதிபதி பராக் ஒபாமாவிடமிருந்து டொனால்ட் ட்ரம்பிடம் கைமாறப் போகின்றது.

‘ட்ரம்ப், ஆசியாவையோ தென்னாசியாவையோ பிரதானப்படுத்தும் கொள்கையைக் கடைப்பிடிக்கப் போவதில்லை. இதனால் இலங்கை மீதான மனித உரிமை குற்றச்சாட்டுகள், போர்க் குற்ற விவகாரங்கள் போன்றவற்றில் அமெரிக்க பிடி தளரவோ அல்லது அடியோடு அற்றுப் போகவோ வாய்ப்புண்டு.

“ஆயினும் இந்தியாவுடன் புதிய அமெரிக்க அரச நிர்வாகம் பொருளாதார - வர்த்தக உறவுகளை மேலும் பலப்படுத்தும்.”

- இவ்வாறு கீத பொன்கலன் மேலும் தெரிவித்தார். (உ)

## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக இருந்து வருகின்றது.

2009 இல் தமிழர்களின் ஆயுத வழி உரிமைப் போராட்டம் ஆயுத மார்க்கத்திலேயே அடக்கி ஒடுக்கப்பட்ட பின்னர், தமிழர்களுக்கு நீதி கிட்ட வேண்டும் என்பதில் ஓரளவுக்கேனும் ஒபாமா தலைமையிலான அமெரிக்க நிர்வாகம் கரிசனை காட்டி வந்தது.

ஆனால், அமெரிக்காவுக்கு வெளியே சர்வதேச விடயங்களில் தலையை நீட்டி ‘சர்வதேச பொலிஸ்காரன்’ போல அமெரிக்கா செயற்படுவது தவறு என்ற கோட்பாட்டை வெளிப்படுத்திவரும் டொனால்ட் ட்ரம்ப் இப் போது அமெரிக்க ஜனாதிபதியாகின்றார்.

அவரது அந்த நிர்வாகப் போக்கு, இலங்கை விடயத்தில் தலையிட்டு தமிழருக்கு நீதி கிட்டச் செய்வதற்கான அழுத்தத்தை வழங்குவதில் அதிக சிரத்தை காட்டாது என்று அரசியல் ஆய்வாளர்கள் ஊகம் தெரிவிக்கின்றனர்.

## இலங்கையின் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ஒபாமாவின் ஜனநாயகக்கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டன் இந்தத் தேர்தலில் தோல்வியடைந்திருக்கின்றமையால் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பாக இலங்கை மீது அமெரிக்கா அண்மைக் காலம் வரை பிரயோகித்து வந்த அழுத்தம் முற்றாக - அல்லது இப்போதைக்கு தற்காலிகமாகவேனும் - நீங்கும் என நம்பலாம்.

இவ்விடயம் குறித்து இலங்கை அரசின் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்தினவும் இத்தகைய சாரப்படவே நேற்று கருத்து வெளியிட்டார்.

‘ட்ரம்ப் தலைமையிலான நிர்வாகம் உள்விவகாரங்களிலேயே அதிகம் கவனம் செலுத்தும் சர்வதேச விவகாரங்களில் கையடிப்பதை அது குறைத்துக் கொள்ளும்.’ - என நான் நம்புகிறேன் என்றார்

“உலகம் முழுவதும் தேசிய சிந்தனை அலை பேரெழுச்சியாக அடித்துக்கொண்டிருக்கிறது. அதனால் அந்தச் சிந்தனை வயப்பட்ட ட்ரம்பே இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவார் என நான் எதிர்பார்த்தேன்” - என்றும் அவர் சொன்னார். இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது மோசமான யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகள் அரங்கேறின என்று கூறப்படுவது குறித்து நீதியான விசாரணை நடத்தப்படும் என்று ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் உறுதி அளிக்க கொழும்பு அத்தகைய விசாரணைகளை நடத்தாமல் இழுத்தடித்து வருகின்றது.

இலங்கையில் 2015 இல் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசும் இத்தகைய விசாரணைக்கு ஒப்புக்கொண்ட போதிலும் அதனை விரைந்து முன்னெடுக்காமல் மேலும் மேலும் கால அவகாசம் கேட்டு வருவது தெரிந்ததே.

ட்ரம்ப் நிர்வாகம் இலங்கையின் கால இழுத்தடிப்பு போக்குக்கு முழு அளவில் ஒத்துழைத்து ஆதரவுதரும் செயற்போக்கையே பின்பற்றும் என்றும் -

அமெரிக்கா தனது உள் நாட்டு விடயங்களுக்கும், மக்களுக்கும் தனது நிதி மற்றும் கவனிப்பைச் செலுத்த வேண் டுமே, சர்வதேச அரசியலுக்கு அல்ல என்ற தீவிர நிலைப்பாட்டைக் கொண்ட ட்ரம்பின் போக்கு கொழும்புக்கு இச்சமயத்தில் கிடைத்த வரப்பிரசாதம் என்று கருதப்படுகின்றது.

## அமெரிக்க ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சி அதிகாரம் இந்த வருட இறுதியுடன் முடிவுக்கு வருகின்றது.

டொனால்ட்ட்ரம்புக்கும் ஹிலாரி கிளிண்டன் அம்மையாருக்கும் இடையில் இத்தேர்தலில் கடும் போட்டி நீடிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், இறுதிக் கட்டத்தில் ட்ரம்ப் தனது வெற்றியை இலகுவாக உறுதிப்படுத்திக் கொண்டார்.

வெற்றியை உறுதி செய்வதற்கு 540 தேர்தல் தொகுதிகளில் 270 தொகுதிகள் என்ற வெற்றி இலக்கைத் தாண்ட வேண்டிய நிலைமை இருந்தது. 276 தேர்தல் தொகுதிகளைத் தனதாக்கி ட்ரம்ப் வெற்றியை நிலைநிறுத்தினார். ஹிலாரிக்கு 218 தேர்தல் தொகுதி வாக்குகளே கிடைத்தன.

## ட்ரம்பின் வெற்றியை...

முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையிலான புதிய உலக ஒழுங்கு கட்டவிழும் என்பதையே தாம் எதிர்பார்த்திருக்கின்றார் என மஹிந்த ராஜபக்ஷ எம்.பி. கூறுகின்றார்.

ட்ரம்பின் வெற்றியை ஒட்டி அவருக்குத் தாம் அனுப்பிய வாழ்த்துக் கடிதத்திலேயே மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

ட்ரம்பின் தேர்தல் விவகாரம் முழு உலகினாலும் மிக உன்னிப்பாக அவதானிக்கப்பட்டது. ஏனென்றால் அவற்றில் பேசப்பட்ட–ஆராயப்பட்ட–அல்லது அவர் மோதிக் கொண்ட விடயங்கள், அமெரிக்கத் தேசத்தின் எல்லைக்கும் வெளியேயான அம்சங்களையும் உள்ளடக்கியனவாக அமைந்தன என்பதனால் - என்று அந்தக் கடிதத்தில் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னைய குடியரசுக் கட்சி நிர்வாகத்துக்கும் மஹிந்தராஜபக்ஷ நன்றி தெரிவித்திருக்கின்றார். குறிப்பாகத் தமது ஆட்சிக் காலத்தில் தமது அரசு விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு அந்த நேரத்தில் ஆட்சியில் இருந்த ஜனாதிபதி ஜோர்ஷ் புஷ் தலைமையிலான அமெரிக்க நிர்வாகம் வழங்கிய ஒத்துழைப்பை நினைவு கூர்ந்து அந்த நன்றியை அவர் வெளியிட்டுள்ளார்.

## தனியாரின்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

பங்கள் சொந்தக் காணிகள் அற்றவை.

அந்த 682 குடும்பங்களில் 462 குடும்பங்களை மீள் குடியேற்றம் செய்வதற்கான காணிகள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளனவாம்.

எஞ்சிய 220 குடும்பங்களை மீள்குடியேற்றவே தற்போது காணிகள் தேடப்படுகின்றன. யாழ்.மாவட்டத்தில் அரச காணிகள் குறைந்த அளவிலேயே மிஞ்சியிருக்கின்றமையால் இந்த 220 குடும்பங்களையும் தனியார் காணிகளை அரசே விலை கொடுத்து வாங்கி மீளக் குடியேற்றுவது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

இதனடிப்படையில் மேற்படி குடும்பங்களுக்கு தலா 20 பேர்ச் நிலம் என்ற அடிப்படையில் தனியார் காணிகளைக் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.11.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.